
கோகுலம்

GOKULAM மார்ச் 2000 ரூ .6/-




சாலை சர்க்கஸ்!

விநோதப் பறவையில் எந்தெந்த பிராணிகள் இடம் பெற்றுள்ளன?



விடை: 1) தலை, அலகு – வாத்து 2) கழுத்து – நெருப்புக்கோழி 3)கால்கள்– கொக்கு 4) தோகை – மயில் 5) இறக்கைகள் – வெளவால்

ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடை: 1) அம்மாவின் தோடு 2) சிறுவனின் தலையில் கட்டிய துணி 3) புடவை டிசைன் 4) சிறுவனின் பெல்ட் 5) கரும் பலகை 6) சிறுமி யின் இடக் கை, 7) சி று மி யி ன் ரிப்பன்.

பிருந்தாவனம்





"கப்பம் கட்டிவிட்டாயே. ஏன் திரும்பிப் போகவில்லை?"

"திரும்பிப் போக காசு இல்லை மன்னா!"

— எஸ். மோகன்



கோகுலம்

2000

மார்ச்

மலர் : 18

இதழ் : 2

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற நமது கிரிக்கெட் அணி தோல்வியைத் தழுவியது உங்களுக்கு வருத்தமாகத்தான் இருக்கும். அதுவும் ஜனவரி 28 மேட்சில் டெண்டுல்கர் அவுட் கொடுக்கப்பட்டது தவறு என்பது டீவியில் தெளிவாகவே தெரிகிறது. கிரிக்கெட்டில் இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் களத்தில் இறங்க வேண்டும். ஆனால் சற்றும் எதிர்பாராத விஷயம், பந்தைச் சுரண்டி சேதப்படுத்தினார் என்பதாக சச்சின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். இது அபத்தமானது மட்டுமல்ல, அவரது மென்மையான உள்ளத்தைப் புண்படுத்தி அவருடைய நேர்மைத் திறனையும் இழிவுபடுத்துவதாகும். தொடரில் நமது அணி தோற்றதை விட அதிகமான மனவருத்தம் இதனால் உண்டாகிறது.

இரு நாடுகளுக்கிடையே அரசியல் உறவு எத்தகையதாக இருந்தாலும், அந்த உணர்வுகள் விளையாட்டில் புக அனுமதிக்கக் கூடாது. கிரிக்கெட் ஆடுவது விரிசல் கண்ட உறவுகளை ஒட்டி பலப்படுத்தப் பயனாகலாமே தவிர, மேலும் சேதப்படுத்தி விடக் கூடாது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று இந்த உயர்ந்த பண்பாடு வேண்டு மென்றே ஒதுக்கப்படுகிறது. ஓர் அணியை மற்றொரு அணி ஏதோ எதிரிபோல் பாவித்து, இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது, கிரிக்கெட் பண்பாட்டை ஆழக் குழிதோண்டிப் புதைப்பதாகும். இதெல்லாம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு மட்டுமல்ல, பள்ளிக்கூடங்களிடையே நடக்கும் போட்டிகளுக்கும் பொருந்தும்.



• வெற்றி! வெற்றி! - உலகக் கோப்பையுடன் இளைஞர் அணித் தலைவர் முகம்மது காய்ஃப்

இந்திய தேசிய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் தோல்வியைத் தழுவினாலும் அதே சமயத்தில் நமது ஜூனியர் கிரிக்கெட் அணி உலகக் கோப்பையைத் தட்டிக் கொண்டு வந்து நாட்டுக்கே பெருமை சேர்த்திருக்கிறது. எனவே, ஸீனியர் கிரிக்கெட்டில் இன்று பின்னடைவு இருந்தாலும் நாளை நிச்சயம் முன்னேற்றம் இருக்கும்; சர்வதேச கிரிக்கெட்டில் நமது நாடு முதலிடத்தைப் பெறும் வாய்ப்பும் உண்டு. இந்த நம்பிக்கையை நமக்கு அளித்துள்ளது இளைஞர் அணி.

முகமது காய்ஃப் தலைமையில் ஜூனியர் உலகக் கோப்பையை வென்ற கிரிக்கெட் அணியை மகிழ்ச்சியுடன் வாழ்த்துங்களேன்!


ஹிப் ஹிப் ஹுர்ரே!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.





கோகுலம்
க்விஸ் முடிவு


ஜனவரி கோகுலம் க்விஸ் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பத்து பேரே சரியான விடைகளை அளித்திருக்கிறார்கள்.

<u>ரூபாய் இருபது பரிசு பெறுவோர்.</u>

1. ஆர். வி. பரத்குமார், ஊத்துக்கோட்டை.
2. எம். ஐஸ்வர்யா, திருநெல்வேலி.
3. வி. அரவிந்த், எட்டாம் வகுப்பு, ஜவஹர் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெய்வேலி.
4. தா. வசந்தப்பிரியா, எட்டாம் வகுப்பு, விருதுநகர்.
5. வி.பி. ராகவேந்திரன், ஒன்பதாம் வகுப்பு, புத்தூர், திருச்சி.
6. எஸ். இந்துமதி, சின்ன சேலம், விழுப்புரம் மாவட்டம்.
7. உ. காசிநாதன், சோழபுரம்.
8. ரமேஷ், பதினோராம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, மடவாளம்.
9. க. இலக்கிய அரசு, ஒன்பதாம் வகுப்பு, ஜவகர் நவோதயா வித்யாலயா, காரைக்கால்.
10. எஸ். மல்லிகா, ஏழாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி

<u>சரியான விடை:</u>

1. தாவரங்களுக்கும் உயிரும்



கோகுலம் மார்ச் 2000 இந்த இதழில்...

உணர்ச்சியும் உண்டு என்ற உண்மையைக் கண்டறிந்தவர் ஜெகதீஷ் சந்திரபோஸ்.
2. கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் புரோட்டோசோவா தொகுதியைச் சேர்ந்தவை.
3. பெரிஸ்கோப் நீர்மூழ்கிக் கப்பலில் பெரிதும் பயன்படுகிறது.
4. மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள முக்கிய கோடை வாசஸ்தலம் டார்ஜிலிங்.
5. ஜீனி(சர்க்கரை) என்பதன் விஞ்ஞானப் பெயர் சுக்ரோஸ்.
6. பூமியில் 6 கிலோ எடையுள்ள ஒரு பொருள் சந்திரனில் ஒரு கிலோ அளவாக இருக்கும்.
7. பழைய டெல்லி நகரை உருவாக்கியவர் ஷாஜஹான்.
8. நியூசிலாந்து கிரிக்கெட் கேப்டன் ஸ்டீபன் ஃப்ளெமிங்.
9. தேசிய கீதத்தை இயற்றியவர் ரவீந்திரநாத் தாகூர்.
10. பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம்பெறுகின்றனவோ அப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளிக்கு வாங்கிக் கொடுக்க விரும்பினால் உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் ஒன்பது மாதங்களே உள்ளன. விரைந்து செயல்படுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

'காணாமல் போனேன்!'

என் குழந்தைப் பருவம்

— சடகோபன் ரமேஷ்

எனக்கு நான்கு வயதாக இருக்கும் போது, பெற்றோர்கள் என்னை ஹரித்து வாருக்கு அழைத்துச் சென்றார்கள். என் சகோதரர்கள், என் அத்தை, மாமா என்று பெரிய கும்பலாகச் சென்றிருந்தோம். ஹரித்துவாரிலிருந்து, மானஸிர் தேவி கோயிலுக்கு விஞ்சில் செல்ல வேண்டும். தங்கியிருந்த இடத்திலிருந்து விஞ்ச் ஏறும் இடத்திற்குச் செல்லும்போது, நான் எங்கோ ஒரு கடையில் எதையோ பார்த்து நின்று விட்டேன். முன்னால் சென்ற மற்றவர்கள் ஒரு மணி நேரம் கழித்து என்னைக் காணாமல் பதறியடித்துக் கொண்டு திரும்பி, வந்த வழியிலே தேடி வந்தார்கள். நான் அழாமல் அதே கடையில் நின்று கொண்டிருந்தேன். 'எப்படிடா அழாமல் ஒரே இடத்தில் நின்று கொண்டிருந்தாய்?' என்று ஆச்சர்யத்துடன் அம்மா கேட்க, "ஒரே இடத்திலே இருந்தாதானே உங்களுக்குத் தேட சுலபமாக இருக்கும்" என்று நான் பதில் சொன்னதாக அம்மா அடிக்கடி சொல்வார். 'அன்று காணாமல் போயிருந்தால் இன்று வடக்கு மண்டல கிரிக்கெட் அணிக்கு விளையாடி இருப்பேன். அதிலிருந்து தேசிய அணிக்கு வந்திருப்பேன்' என்று நான் சிரித்துக் கொண்டே சொல்வேன்.

நான் பிறந்தது சென்னையில்தான். எனக்கு



படம்:
சௌந்தர் ராஜன்



பார்த்துக்கொண்டிருந்தார் அப்பா. அது தவிர ராஜாஜியின் பக்தர். சுதந்திரா கட்சி வேலைகள் என்று சுற்றிவிட்டு இரவு வெகு தாமதமாகத்தான் வருவார். எனவே எங்களுக்கு எல்லாமே அம்மாதான். எது தேவையென்றாலும் அவரிடம்தான் கேட்போம். ஐந்தாம் வகுப்புவரை ஆழ்வார்திருநகரிலேயே படித்தேன்.



முன்னால் மூன்று சகோதரர்கள்.

நாங்கள் நால்வராதலால், சுற்றியுள்ளவர்கள் எங்களை 'ராம, லட்சுமண, பரத, சத்ருக்னன் சகோதரர்கள்' என்றுதான் சொல்வார்கள். சரஸ்வதி பூஜை நாள் முடிந்து விஜயதசமி நாள் துவங்கும்போது நான் பிறந்தேனாம். அதனால் என் ஜாதகத்தை ஆராய்ந்த ஜோஸியர்கள் 'பையன் ரொம்பப் புத்திசாலி; பிரமாதமாக வருவான்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கடைக்குட்டி ஆதலால் ரொம்பவே செல்லம்.

எங்கள் வீடு சென்னை ஆழ்வார் திருநகரில் இருந்தது. எதிர்வீட்டில் மார்க்கபந்து என்று ஒருவர் இருந்தார். என் தந்தையின் நண்பர். என்னை அடிக்கடி அவர் வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு போய் விடுவார். பூஜை செய்யும்போது என்னை பக்கத்தில் வைத்துக் கொள்வார். நான் அவரை ஸ்லோகம் சொல்ல விடாமல் "ஊதுவத்தியிலிருந்து ஏன் புகை வர்றது?; கற்பூரம் ஏன் எரியுது?" என்று கேள்விகளால் திணற அடிப்பேனாம். ஆனால் அவர் சற்றும் பொறுமையிழக்காமல் பதில் சொல்லுவாராம்.


வெளிநாட்டு வங்கியில் வேலை

அதன்பின் தி.நகர் ராமகிருஷ்ணா பள்ளியில் சேர்த்து விட்டார்கள். என் மூத்த அண்ணா சதீஷ்தான் கிரிக்கெட்டில் எனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தவர். அவர் பேட்டை எடுத்துக் கொண்டு போகும்போது, பின்னாலேயே நானும் சென்று விடுவேன். இப்படித்தான் துவங்கியது என் கிரிக்கெட்.

ராமகிருஷ்ணா பள்ளியில் சேர்ந்த போது என் கிரிக்கெட் ஆர்வம் உச்ச கட்டத்தில் இருந்தது. பள்ளிக்கூடம், விட்டால் கிரவுண்டில் கிரிக்கெட் என்று பொழுது போயிற்று. கிரிக்கெட் மட்டுமல்லாமல் ஸீஸனுக்கு ஏற்றபடி விளையாடுவோம். விம்பிள்டன் நடக்கும்போது டென்னிஸ் ஆடுவோம். உலகக் கோப்பை கால்பந்து நடக்கும்போது எங்கள் பேட்டையை கால்பந்து ஜுரம் பற்றிக் கொள்ளும்.

மற்ற விளையாட்டுகளில் ஆர்வம் இருந்தாலும் கிரிக்கெட்டை மட்டும் விடாமல் தொடர்ந்து பிராக்டீஸ் செய்து வந்தேன்.

முழுப் பரீட்சை விடுமுறையில் இரவில் டென்னிஸ் பால் கிரிக்கெட் டோர்னமெண்ட் பல இடங்களில் நடக்கும். மாலை ஆறு மணிக்குக் கிளம்பினால், குரோம்பேட்டை, பல்லாவரம் என்று டோர்னமென்ட் ஆடிவிட்டு, மறுநாள் காலை ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்புவேன்.



ஒருமுறை எனக்கு நல்ல காய்ச்சல். 'டேய் நீ வந்தே ஆகணும்... இல்லாட்டி நம்ப காலி' என்று நண்பர்கள் வற்புறுத்தி வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு தாம்பரத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். 'காய்ச்சலில் படுத்திருந்தவனை அழைத்துச் சென்று விட்டார்களே' என்று அம்மா கவலைப்பட மாட்சில் அரை சதம் போட்டுவிட்டு நான் வந்தேன். ஆச்சர்யமான விஷயம், காய்ச்சல் குறைந்து போயிருந்ததுதான்! நான் அப்போது டென்னிஸ் பாலில் செய்த பிராக்டீஸ்தான் நல்ல அடித்தளமாக அமைந்தது என்பதை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.


எங்கள் வீட்டில் மாமரம் இருந்தது. மாங்காய் பறிக்க வேண்டுமானால் அம்மா என்னிடம்தான் சொல்லுவார். சர, சர வென்று மரத்தில் ஏறி, போதும், போதும் என்ற அளவுக்குப் பறித்துப் போடுவேன். சிலமுறை நான் நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டு லேட்டாக வீடு திரும்பும்போது முன் கதவு மூடி இருக்கும். மாடியில் இருந்தோம். பின்புறமாகப் போய், தண்ணீர் பைப்பில் ஏறி, பின் கதவு வழியாக உள்ளே போவேன். எல்லோரும் அதிர்ச்சியடைவார்கள்.

கமல், ரஜினி படமென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். என் சகோதரர்கள் அவர்கள் நண்பர்களுடன் படங்களுக்குச் செல்லும்போது 'நான் சின்னப் பையன்' என்று வீட்டிலேயே விட்டுச் சென்று விடுவார்கள். கத்தி கலாட்டா செய்யும் என்னை அடக்க அம்மா ரொம்பவே சிரமப்படுவார்.

ஆழ்வார் திருநகரிலிருந்து தி.நகர் சென்று வருவது மிகவும் கஷ்டமாக இருந்ததால் லோக்கலில் ஒரு பள்ளியில் சேர்த்து விட்டார்கள். அது கிறிஸ்துவ பள்ளி. ஒருமுறை பள்ளிக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பேச்சாளர் வந்திருந்தார். 'மாணவர்கள் போதை மருந்துக்கு அடிமை ஆகக் கூடாது' என்று பெரிய லெக்சர் கொடுத்தார். போதை மருந்துக்கு அடிமையாவதை addiction என்பார்கள் அல்லவா. நான் பேசாமல் இருக்காமல் அந்தப் பேச்சாளரிடம் "ஸார் காலையில் எனக்கு காப்பி சாப்பிட்டே ஆக வேண்டும்; வியாழக்கிழமை காலையில் கல்கி படித்தே ஆக வேண்டும். இதையும் addiction என்றுதான் சொல்ல வேண்டுமா? கெடுதலை தரும் ஒரு விஷயத்துக்கு அடிமையாக இருப்பதும் addiction, நான் சொன்ன பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக இருப்பதும் addiction இந்த வார்த்தைப் பிரயோகம் சரிதானா ஸார்?" என்று கேட்டு விட்டேன். பேச்சாளர் ஒரு நிமிடம் திகைத்து விட்டார். அன்று மாலை தலைமை ஆசிரியர் வீட்டிற்கு வந்து அப்பாவிடம் நான் கேட்டதைப் பற்றி சிலாகித்துப் பெருமையுடன் பேசினார்.

கிரிக்கெட்டில் முன்னுக்கு வர வேண்டுமென்றால் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில்தான் சேர வேண்டும் என்று பரவலாகச் சொல்வார்கள். ஏனென்றால் பதினாறு வயதுக்குட்பட்ட மாநில அணியில் சாந்தோம் பள்ளி மாணவர்களே அதிக அளவு இருந்தனர். எனவே

நானும் ஆழ்வார் திருநகரை விட்டு விட்டு சாந்தோம் பள்ளியில் சேர்ந்து விட்டேன். காலையில் ஏழு மணிக்குக் கிளம்பினால் பள்ளிக்கூடம், பிராக்டீஸ், டியூஷன் என்று ஓய்வே கிடையாது. இரவு வீடு திரும்ப ஒன்பது மணி ஆகும். சாந்தோம் பள்ளியில் எனக்கு வகுப்பாசிரியராக தாமஸ்



• அப்பா, அம்மா, அண்ணனுடன் ரமேஷ்

என்பவர் இருந்தார். அக்கவுண்ட் வகுப்பு அவர்தான் எடுப்பார். கொஞ்சம் வீக்காக இருந்த என்னை அக்கவுண்ட்ஸில் தேத்தி யவர் அவர்தான்!

பதிமூன்று வயதுக்குட்பட்ட அணியில் நான் ஆடும்போது வேகப் பந்து வீச்சாள னாகத்தான் இருந்தேன். பதினாறு வயதுக் குட்பட்ட அணியில் சேர முயற்சி செய் யும்போது ஸ்பின் போலராக மாறினேன். ரொம்பவும் கடுமையாக உழைத்தேன். எனக்கு வழி காட்டிய கோச் கிருஷ்ணன், 'உனக்கு நல்லா பாட்டிங் வருகிறது. எனவே உனக்கு பேட்டிங்குதான் சிபாரிசு செய் யப் போகிறேன்' என்றார். சேப்பாக்கத்தில் ஏதோ மாட்ச் நடக்கிறது என்று பார்க்கப் போனேன். எதேச்சையாக நோட்டீஸ் போர்டைப் பார்த்தால், பதினாறு வயதுக் குட்பட்ட அணியில் என் பெயர் இருந் தது. தலைகால் புரியவில்லை. அதற்கப் புறம் நான் எப்படி அண்ணாசாலைக்கு வந்தேன்; பஸ்ஸைப் பிடித்தேன்; வீட்டிற்கு வந்தேன் என்பது சிறிதும் ஞாபகத்துக்கு வரவில்லை! அதன் பின்னர் மாநில அணி யில் இடம் பெற்றேன். பிறகு ஏறுமுகம் தான். ப்ளஸ் டூ படிப்பை பள்ளியில் தொடராமல் தனியாகப் படித்து எழுதி னேன். கிரிக்கெட் பிராக்டீஸ் செய்ய நிறையவே நேரம் கிடைத்தது.

நிறைய பேர் என்னைப் பார்க்கும் போது கிரிக்கெட்டைத் தவிர வேறு ஆர்வம் எதுவும் கிடையாதா என்று விசாரிப்பார்கள். எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் கல்கி. பொன்னியின் செல் வன் தொடராக வந்தபோது படித்தது மட்டுமல்லாமல், பின்னர் புத்தகமாகவும் படித்து மகிழ்ந்திருக்கிறேன். ஐந்து பாகங்களில் அவ்வப்போது எனக்குப் பிடித்த பகுதியை எடுத்துப் படிப் பேன். வந்தியத்தேவன் பேசும் பல வசனங்கள் எனக்கு மனப்பாடம். இது தவிர சிவகாமியின் சபதம், கள்வனின் காதலி என்று கல்கி அவர்களின் பல புத்தகங்களைப் படித்திருக்கிறேன். ஆங்கிலத்தில் ஆர்தர் கானன் டாயல் எழுதிய ஷெர்லாக்ஹோம்ஸ் கதைகள் மிகவும் பிடிக்கும்.

நாங்கள் நான்கு சகோதரர்கள் மட்டுமேயாதலால், ஒரு சகோதரி இல் லையே என்ற ஏக்கம் எனக்குண்டு. என் நண்பர்கள் வீட்டில் அவர்கள் சகோதரி கள் கொட்டும் பாசத்தைப் பார்க்கும் போது இப்படி எண்ணத் தோன்றும்.

களத்தில் இறங்கும்போது சூரியனைப் பார்த்துக்கொண்டு, வலது காலை எடுத்து வைத்து நுழைவது என் ஸெண்டிமெண்ட். வாய் ஆஞ்சநேய ஸ்லோகத்தைச் சொல் லும். சென்னையில் இருந்தால் சனிக் கிழமை ஆஞ்சநேயர் கோயிலுக்குச் செல்வேன். எனக்கு கிரிக்கெட்டில் வழிகாட்டிகள் என் சகோதரர்கள்தாம். அவர்கள்தாம் எனக்கு நண்பர்கள் போலவும் இருந்தார்கள். என் முன் னேற்றத்திற்குப் பெற்றோர்கள் அதிக அளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். இன்று நான் ஓரளவு முன்னணியில் இருக்கிறேன் என்றால் அதற்கு என் கடின உழைப்பு தவிர, அவர்களின் ஊக்கமும் ஒரு கார ணம்.

எந்த விஷயத்தில் உங்களுக்கு ஈடு பாடு உள்ளதோ அதில் முயற்சியோடு உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பது என் வாழ்விலிருந்து நான் கண்ட உண்மை!

— ப்ரியன்







ஹா, ஹா, ஹா!




''நான் நடித்துக் காட்டிய கட்டபொம்மன் நாடகம் எப்படி இருந்தது?''

''அபாரம்! கண்ணை மூடிக்கிட்டே ரசிக்கலாம்!''

— நெ. இராமன்





இடமிருந்து வலம்

1. வெற்றிலை, பாக்குடன் இதைச் சேர்த்தால் நாக்கு சிவக்கும் (5)

2. ரொட்டி, புளித்த மாவின் மேல் வளரும் கெட்ட உயிரி (3)

3. உழவு செய்யாமல் இருக்கும் நிலத்தை இவ்வாறு கூறலாம் (3)

7. எலுமிச்சையில் உள்ள அமிலம் (4)

9. தூக்கம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

11. மருத்துவ குணம் உள்ள இந்தச் செடி பெருமாளுக்கும் உகந்தது (3)



குறுக்கெழுத்துப் புதிர்

வலமிருந்து இடம்

4. வாழையின் இந்தப் பகுதியை உண்டால் நார்ச்சத்து கிடைக்கும் (3)

6. அந்தக் காலத்தில் விவசாயிகள் உணவை இதில் கொண்டு செல்வார்கள் (4)

10. இலக்கணங்களில் ஒன்று (3)

13. வோட்டுப் போடும் வயது 18 என்று இந்திய அரசு ________ செய்துள்ளது (5)

மேலிருந்து கீழ்

1. அழகு என்பதற்கு இன்னொரு பெயர் (5)

2. வீடு, பெட்டி போன்றவற்றைப் பாதுகாக்க இது அவசியம் (3)

8. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்களை இதன் மூலம் நாம் அறிய முடிகிறது (4)

9. தட்டையான அலகு, விரல்களில் சவ்வுடன் காணப்படும் இப் பறவை நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடியது (3)

கீழிருந்து மேல்

4. பிரகதீஸ்வரர் கோயில் இங்குள்ளது (3)

5. உலோகங்களில் ஒன்று. மிகவும் கடினமானது (4)

12. நாய் பூனையைக் கண்டால் ________ கொள்ளும் (3)

13. சுதந்திர தேவி சிலை உள்ள அமெரிக்க நகரம் (5)

– என். கௌரி, மணலி.



விடை 17 ஆம் பக்கம்

வியாபாரத் தந்திரம்!

கதை: க. தினேஷ்குமார் படம்: லட்சுமிபிள்ளை




சரி! பேக் பண்ணிக் கொடுப்பா.
இந்தாங்க, நன்றி.
கந்தன் முதலாளியிடம் நடந்ததைக் கூறினான்.
முத்து இங்கே வா!
என்னங்க சார்?
300 ரூபாய் செருப்பை 250 ரூபாய்க்குக் கொடுத்தியா?
ஆமாம்! நாளைக்கு அந்தப் பணம் வந்துரும் சார்!
ஏமாற்றி விட்டால் யார் பொறுப்பு?
கண்டிப்பா பணம் வரும். இல்லைன்னா என் சம்பளத்தில் கழித்து விடுங்கள்.
எப்படி தெரியாதவங்க மேலே நம்பிக்கை வைக்கறே?
நான் கொடுத்தது இரண்டு இடது கால் செருப்பு சார்!
அதனால நாளைக்கு வந்து மாற்றிவிட்டு பணத்தையும் தந்துடுவாங்க.
வியாபாரமும் ஆச்சு. கஸ்டம ரையும் திருப்தி படுத்திட்டே, பலே முத்து!
சே! அதிகமா பாராட்டு வாங்கி நம்ம முகத்தில் கரியைப் பூசிட்டானே!

புதிர் உலகம்!


I நினைத்த எண்ணைக் கூறுங்கள்

1 லிருந்து 8க்குள் ஓர் எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். அதை 2 ஆல் பெருக்கி 2ஐக் கூட்ட வேண்டும். அந்த எண்ணை 5 ஆல் பெருக்கி 5 ஐக் கூட்ட வேண்டும். கூட்டிய விடையை நீங்கள் கூறியவுடன் நினைத்த எண்ணை உடனே கூறுவேன். எப்படி?

II

இயல் எண்களில் ஒரு எண்ணை நினைத்துக் கொள். நினைத்த எண்ணின் அளவு கடன் வாங்கி கூட்டிக் கொள். நானும் 10 தருகிறேன். அதையும் கூட்டிக் கொள். மொத்தத் தொகையில் சரிபாதியை சாமிக்குப் போட்டு விடு. மீதியில் கடன் பெற்ற தொகையைத் திருப்பிக் கொடுத்து விடு. மீதி உன்னிடம் உள்ள தொகையை நான் கூறுகிறேன்.

டி. கிருஷ்ணமூர்த்தி,
ஏழாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
அன்னூர்.



III கழுதையும் குதிரையும்

குதிரையும் கழுதையும் துணிச் சுமைகள் சுமந்து சென்றன. கழுதை, "ஏ! குதிரையே! உன் சுமைகளுள் இரண்டை நீ எனக்குத் தந்தால் நீ சுமக்கும் எண்ணிக்கையை நானும் சுமப்பேன்" என்றது.

இதைக் கேட்ட குதிரை, "கழுதையாரே! உன் சுமைகளுள் நீர் ஒன்றைத் தந்தால் நான் உம்மைப் போல இரண்டரை மடங்கு சுமப்பேன்" என்றது.

அப்படியானால் ஒவ்வொன்றும் எத்தனை சுமைகள் சுமந்தன?

சிவ. மணவழகி,
திருச்சிற்றம்பலம்.

IV 26 வர வேண்டும்!


ஆறுமுனை கொண்ட இந்த நட்சத்திரத்தில் எப்படி கூட்டினாலும்

VI. அதிக முட்டைகள் : 5 X 100 = 500
முட்டை : 1 X 30 = 30
முட்டைகள் : 94 X 5 = 470

100	1000

எண் 26 வருமாறு எண்களை வரிசைப்படுத்த வேண்டும். 1 முதல் 12 எண்கள் வரை பயன்படுத்த வேண்டும். ஒரே எண்ணை இருமுறை பயன்படுத்தக் கூடாது. ஆனால் அனைத்து எண்களும் இருக்க வேண்டும்.

வி. இந்திரஜித், ஆத்தூர்.



V சொல்லுங்கள் பார்க்கலாம்!

ஒரு நூறு ரூபாய் இருக்கிறது. அந்த நூறு ரூபாயில் பத்து தாள்கள் வர வேண்டும். ஆனால் பத்து ரூபாய் வரக் கூடாது. ஆனாலும் நூறு ரூபாய்க்கு மேல் போகக் கூடாது எப்படி?

ம. பிரபு, பெரியதச்சூர்.

V1 பொன்னன் வாங்கிய மூட்டைகள் எத்தனை?

பொன்னன் ஆயிரம் ரூபாயோடு சந்தைக்குப் போனான். அங்கே அரிசி, கோதுமை, உமி மூட்டைகளை வாங்கினான்.

அரிசி மூட்டை ஒன்று 100 ரூபாய்

கோதுமை மூட்டை ஒன்று 30 ரூபாய்

உமி மூட்டை ஒன்று 5 ரூபாய்

சிறிது நேரத்தில் அவன் கொண்டு வந்த ஆயிரம் ரூபாயும் செலவாகி விட்டது. ஆயிரம் ரூபாய் கொடுத்து தான் வாங்கிய மூட்டைகளை எண்ணிப் பார்த்தான். அவை சரியாக 100 இருந்தன.

பொன்னன் வாங்கிய நூறு மூட்டைகளில் அரிசி மூட்டை எத்தனை? கோதுமை மூட்டை எத்தனை? உமி மூட்டை எத்தனை?

– ஆறுபாதி புகழேந்தி
மயிலாடுதுறை



விடைகள்


I. 5ஐக் கூட்டிய எண்ணின் முதல் இலக்கத்திலிருந்து ஒன்றைக் கழித்து, நினைத்த எண்ணைக் கூறி விடலாம்!

II. 5 - நாம் கொடுக்கும் பத்தில் பாதியே விடை ஆகும்.

III. கழுதை 5 சுமைகள்

குதிரை 9 சுமைகள்.

IV.



V.

ரூபாய்	=	தாள்
50 x 1	=	50
20 x 1	=	20
5 x 5	=	25
2 x 2	=	4
1 x 1	=	1

தாள் 10 = 100 ரூபாய்



முனிவர் ஒருவருக்கு சேது, மாது - சிந்து, பிந்து என்று நான்கு சீடர்கள். நால்வரும் வெவ்வேறு குணமுடையவர்கள்.

சேது ஒரு முழுச் சோம்பேறி. உணவை வாயில் எடுத்துப் போட்டால் கூட, 'என்னடா நீ... என்னை விழுங்க வைக்கிறாயே?' என்று அலுத்துக் கொள்வான்.

அடுத்தவன் மாது ஒரு திருடன். எதைப் பார்த்தாலும் அதன் மீது ஆசை கொள்வான். பிறர் அறியாமல் அதை அபகரிப்பதில் சமர்த்தன்.

மூன்றாமவன் சிந்து ஒரு அதிகப்பிரசங்கி. சம்பந்தம் இல்லாத விஷயங்களில் மூக்கை நுழைப்பான்.

கடைசி சீடன் பிந்து ஒரு பண்டிதன். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பார்கள் அல்லவா? அப்படி, எதைப் பார்த்தாலும்

மாந்தோட்டத்தில் ஒருநாள்...

அதை ஆற அமரச் சிந்திக்கத் தொடங்கி விடுவான்.

ஒருநாள் காலையில், முனிவர் இந்த நான்கு சீடர்களையும் அழைத்துச்

சொன்னார்: "சீடர்களே! இங்கிருந்து மேற்குத் திசையில் கொஞ்ச தூரத்தில் ஒரு தோட்டம் உள்ளது. நீங்கள் நால்வரும் இப்போதே கிளம்பி, அங்கு செல்லுங்கள். நாள் முழுவதும் அங்கேயே தங்கிவிட்டு, மாலையில் என்னிடம் இங்கு திரும்பி வாருங்கள்" என்றார். நால்வரும் கிளம்பினார்கள்.

குறுக்கிட்ட முனிவர், "இன்னும் கேளுங்கள். மாலையில் ஆசிரமம் திரும்பியதும், அங்கு என்னென்ன பார்த்தீர்களோ, அனுபவித்தீர்களோ, அதை அப்படியே என்னிடம் கூற வேண்டும்" என்றார்.

அவ்விதமே செய்வதாக வாக்களித்துவிட்டு, நால்வரும் கிளம்பிப் போனார்கள்.



அது பெரிய பழத் தோட்டம். ஒரு பக்கம் பலா மரங்கள்... இன்னொரு பக்கம் மாமரங்கள்... இப்படி இன்னும் ஏராளமான மர வகைகள்.

முதலில் உள்ளே நுழைந்த சேதுவை, அங்கு இருந்த அடர்ந்த குளுகுளு நிழல் வெகுவாகக் கவர்ந்தது. துளியும் வெய்யில் விழாத அடர்ந்த நிழல் தரும் ஒரு மரத்தடியாகப் பார்த்து துண்டை விரித்துப் படுத்து விட்டான். கொஞ்ச நேரத்தில், அவனிடம் ஆழ்ந்த நித்திரை!

அடுத்ததாக உள்ளே நுழைந்த மாதுவுக்கு, அங்கு பழுத்துத் தொங்கிய பலவகையான பழங்களைப் பார்த்ததும், நாக்கில் நீர் ஊறத் தொடங்கி விட்டது. அது போதாதா? அவ்வளவுதான். கற்களை எறிந்து, பலவிதமான பழங்களையும் பறித்துத் தின்னத் தொடங்கி விட்டான்.

மூன்றாவது சீடனாகிய சிந்து, என்ன செய்தான் தெரியுமா? அவன்தான் ஒரு அதிகப் பிரசங்கி ஆயிற்றே! எனவே, சம்பந்தமில்லாத வேலைகளில் ஈடுபடலானான். அந்தத் தோட்டத்தில் எந்தெந்த மரம் எத்தனை இருந்தால் அவனுக்கு என்ன.? எது பழுத்தால் என்ன, பழுக்கா விட்டால் என்ன? ஆனால், அவன் விடுவதாக இல்லை. அந்தத் தோட்டத்திலுள்ள மொத்த மரங்களையும் எண்ணத் தொடங்கி விட்டான். அதில், பழுத்திருப்பது, பழுத்திராதது, இன்னும் எந்தெந்த மரத்தில் எத்தனை பழம் போன்ற விவரங்களைத் திரட்டத்

ஜானகிமணாளன்



தொடங்கி விட்டான்.

அடுத்தவன் பிந்து என்ற பண்டிதன். ஆராய்வதுதான் அவனது இயல்பு. அதற்கேற்ப, மரம் மரமாகப் போனான். அவற்றை உற்றுப் பார்த்தான். ஒவ்வொரு பழமாகப் பார்த்தான். அவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டான்.

இவ்வாறாக, நால்வரும் தோட்டத்தில் பகல் நேரம் முழுவதையும் கழித்துவிட்டு, மாலையில் ஆசிரமம் திரும்பினர்.

அவர்கள் வாய்திறந்து விஷயத்தைச் சொல்வதற்குள், அவர்களின் தோற்றமே முனிவருக்குப் பல்வேறு உண்மைகளை உணர்த்திவிட்டது.

சேதுவிடம் வீங்கிய முகம். உடனே முனிவர் நாள் முழுதும் அவன் மரத்தடியில் படுத்து உறங்கியதைத் தவிர, வேறு எதையும் செய்யவில்லை என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்.

மாதுவின் உடம்பு முழுவதும் வரி வரியாகச் சாட்டையடிக் காயங்கள். உடனே முனிவருக்கு, அவன் தோட்டத்தில் பழங்களைத் திருடித் தின்று விட்டுத் தோட்டக்காரனிடம் அடிவாங்கிக் கொண்டு வந்திருப்பது புரிந்து விட்டது.

சிந்துவிடம் போன முனிவர், "என்ன சிந்து! தோட்டத்தில் நீ என்ன செய்தாய்?" என்றார்.

"தோட்டத்திலுள்ள மரங்களையும், அவற்றில் பழுத்துள்ள பழங்களையும் எண்ணினேன்" என்றான் சிந்து.

"அப்படியா? என்னென்ன மரங்கள், எத்தனை இருந்தன? மொத்தப் பழங்கள் எத்தனை? எங்கே, வகைப்படி கூறு பார்க்கலாம்" என்றார் முனிவர்.

"அது வந்து..." என்ற சிந்துவால் ஒரு எண்ணிக்கையைக் கூட நினைவில் வைத்துக் கொண்டு சொல்ல முடியவில்லை. எல்லாவற்றையும் மறந்து போய் விட்டான்.

நான்காவது சீடன் பிந்து, அமைதியாக அங்கு நடப்பதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே முனிவர், "பிந்து, தோட்டத்

தில் நீ என்ன செய்தாய்? சொல்லேன்!'' என்றார்.

அதற்கு அவன், ''குருவே! நான் எல்லா மரங்களையும் உற்றுப் பார்த்தேன். அப்போது எனக்கு ஒரு உண்மை புரிந்தது'' என்றான்.

“என்ன அது? சொல்லேன்.”

“சில மரங்களின் கிளைகள் தரை வரையில் வளைந்து தாழ்ந்திருந்தன. சில வற்றின் கிளைகள் சிறிதும் வளையாமல் தலை நிமிர்ந்து நின்றன'' என்றான்.


“அப்படியா? மேலும் சொல்'' என்று உற்சாகமூட்டினார் முனிவர்.

“எந்த மரத்தின் கிளைகளில் பழங்கள் நிறையக் காய்த்துப் பழுத்திருந்தனவோ, அந்தக் கிளைகள் மிகவும் பணிந்து, தாழ்ந்து தரையைத் தொட்டன. எவற்றில் காய்கள் ஏதும் காய்த்துப் பழுத்திருக்கவில்லையோ, அவை சிறிதும் பணியாமல் நிமிர்ந்து நின்றன.”

“மிக நன்றாக மரங்களை நீ உற்று நோக்கியிருக்கிறாய்'' என்று பாராட்டிய முனிவர், அவனிடம், “சரி... இதிலிருந்து நீ என்ன கற்கிறாய்?'' என்றார்.

“யாரிடம் விஷய ஞானம் அதிகமாக இருக்கிறதோ, அவர்களிடம் பணிவு மிகுந்து காணப்படுகிறது. அந்தப் பணிவு அவர்களை உயர்த்தும். விஷய ஞானம் இல்லாதவர்களிடம், பணிவு என்பது சிறிதும் இருப்பதில்லை. அவர்கள், பழங்களற்ற மரங்களைப் போன்று, தம்மை மிகவும் உயர்ந்தவர் போல் காட்டிக் கொள்வார்கள். ஆனால், அவர்களிடம் உயர்வு எதுவும் ஏற்பட்டிருக்காது'' என்று விளக்கினான் பிந்து.

அதைக் கேட்ட முனிவர், மிகவும் மகிழ்ச்சியடைந்தார். “தோட்டத்துக்குச் சென்ற உங்கள் நால்வரில், நீதான் உண்மையான ஞானத்தைப் பெற்றுள்ளாய்'' என்று பிந்துவை வெகுவாகப் பாராட்டினார்.





குறுக்கெழுத்துப் புதிர் விடை

நமக்கு ஏன் பசிக்கிறது?



பசி என்றால் என்ன? நம் உடலுக்கு உணவு தேவைப்படும்போது நம் உடல் அதற்காக ஏங்குகிறது. இதனையே நாம் 'பசி' என்கிறோம். அது சரி. நமக்குப் பசி உணர்வு ஏற்படுவதை நாம் எப்படி அறிகிறோம்?

நாம் எல்லோரும் நினைப்பது போல், நம் வயிறு 'காலியாய்' இருந்தால் பசி எடுப்பதில்லை. காலி வயிறுக்கும் பசிக்கும் அவ்வளவாகத் தொடர்பு இல்லை. பிறக்கும் குழந்தை காலி வயிறுடன்தான் பிறக்கிறது. இருந்தாலும் கூட, பிறந்து பல நாட்கள் வரை அக் குழந்தை 'பசி உணர்வை' அறிவதே இல்லை. அது மட்டுமல்ல. நோயுற்ற மனிதர்களும் கூட, பல நாட்கள் உணவு உண்ணாமல் காலி வயிறுடன் இருந்தபோதிலும் அவர்கட்குப் பசிப்பதில்லை. இதன் காரணம் வயிறு காலியானால் உடனே பசியெடுப்பதில்லை என்பதால்தான்.

நாம் உண்ணும் உணவு செரிமானமாகி, உட்கிரகிக்கப்பட்டு இரத்தத்துடன் கலந்து உடலுக்குத் தேவையான பொருளாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட பொருட்கள் இரத்தத்தில் குறைந்தால், அல்லது இல்லையென்றால், அக் குறையை ஈடுகட்ட வேண்டி, உணவு உட்கொள்ள வேண்டும் என்ற தகவல் மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது. எப்படி தெரியுமா? உடல் தேவைக்கான பொருள் இரத்தத்தில் குறையும்போது, உணர்ச்சி நரம்புகள் இத் தகவலை மூளையிலுள்ள ஹைப்போதலாமஸ் என்னும் பகுதியிலுள்ள 'பசி மையத்து'க்குத் தெரிவிக்கின்றன. உடனே 'பசி மையம்' வயிறு மற்றும் குடல் பகுதிகளின் மேல் 'பிரேக்' போல் செயல்பட்டு, 'உணவு உட்கொள்ள வேண்டும்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது. இரத்தத்தில் போதுமான அளவு உணவு இருக்கும் போது, வயிறும் குடலும் மெதுவாகவே செயல்படுகின்றன. இரத்த உணவு குறைந்தால், 'பசி மையம்' வேகமாக 'வேகஸ்' என்ற கட்டளை நரம்பு மூலம், வயிறு மற்றும் குடலுக்கு ஆணையிட்டு, அவைகளை வேகமாகச் செயல்பட வைக்கிறது; வயிறு வேகமாய் சுருங்கி விரிகிறது; சீரண நொதியும் சுரக்கிறது. இதனாலேயே நமக்கு அதிகமாகப் பசி ஏற்படும் சமயத்தில், நம் வயிறு 'உறுமும் ஒலியை' நாமே கூட கேட்க முடிகிறது. பசி ஏற்படும் சமயத்தில் வயிறு மற்றும் குடல் மேல் செயல்படும் ஹார்மோன்களும் சுரக்கின்றன. பசியுணர்வு என்பது கொஞ்சம் சிக்கலான வேதியியல் செயல்பாடுதான்.

நாம் பசியாய் இருக்கும்போது, நம் உடல் சிறப்பு வகை உணவுக்காக ஏங்குவதில்லை; நம் உடலுக்குத் தேவையான உணவை மட்டுமே கேட்கிறது. பசிக்காக நாம் கண்டதையும் உண்டால், உடலுக்குத் தீங்கு ஏற்படும். ஒருவருக்கு உருளைக் கிழங்கு மட்டுமே பிடிக்கும் என்பதற்காக, அதை மட்டுமே உண்டால், உடலுக்கு அது போதாது; புரதம் மற்றும் கொழுப்பு உணவும் கட்டாயம் தேவை. எல்லாவித உணவையும் சரி விகித அளவில், சமமாய் உண்டால் தான் உடல்நலத்துடன் வாழ முடியும்.

பசி ஏற்பட்டு, உணவு உண்ணும்போது, 'போதும்' என்ற தகவலை வயிற்றிடம் சொல்





பவர் யார்? மூளையிலுள்ள 'பசி மையம்'தான். வயிற்றில் உணவு விழுந்ததும், வயிறு மெதுவாகச் செயல்படத் துவங்குகிறது. இத் தகவல் பசி மையத்துக்கு சொல்லப்பட்டதும், 'சரி, வயிறு நிரம்பி விட்டது; போதும்; உட்கொள்வதை நிறுத்து' என்ற கட்டளையும் அங்கிருந்துதான் வருகிறது. நாம் சாப்பிட்டால் மட்டுமல்ல. இரத்தக் குழாயில், நேரடியாக ஊசி மூலம் சர்க்கரை நீரைச் செலுத்தினாலும் கூட, பசியுணர்வு மறைந்து விடும்.

ஒருவர் உணவின்றி எவ்வளவு நாட்கள் வாழ முடியும்? அது அவரவர் உடல் தன்மையையும் தாங்கும் திறனையும் பொறுத்தது. ஓர் அமைதியான மனிதர், உணர்ச்சிபூர்வமான மனிதரை விட, உணவின்றி அதிக நாட்கள் தாக்குப்பிடிக்க முடியும். ஏனெனில் அமைதியான மனிதரின் உடம்பிலுள்ள புரதம், அவரது செயல் திறனுக்கு ஏற்றபடி, மிக மெதுவாகவே பயன்படுத்தப்படுகிறது. அதிகமாக உணர்ச்சிவயப்படுபவருக்கு, அதிக சக்தி செலவாகிறது. தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு பெண், வெறும் தண்ணீர் மற்றும் சோடா நீர் மட்டுமே அருந்தி, 102 நாட்கள் வாழ்ந்து உலக சாதனை படைத்திருக்கிறாள்!

— எஸ். மோகனா



அரசனை மீட்ட மந்திரி!


கோயிலூர் நதிக்கரைப் பக்கம் அமைந்திருந்தது. அப்பகுதியை பூபதி ராஜா அரசாட்சி செய்து வந்தார். ஒருநாள் ராஜா தன்னுடைய மந்திரியுடன் நதிக்கரைப் பக்கம் உலாச் சென்றார். நதி மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த ராஜா, தன்னுடைய மந்திரியை அழைத்து, "கிழக்குப் பக்கம் எந்த நாடு உள்ளது?" என வினவினார். உடனே மந்திரியும் "கிழக்குப் பக்கம் மலையூர் நாடு உள்ளதென" பதில் அளித்தார்.

ராஜா சற்று யோசித்தவாறு, "நம்முடைய நதி நீரினால் மலையூர் நாட்டு மக்கள் பயன் அடைகிறார்கள். இது சரியல்ல. இன்றே நதியில் அணையைக் கட்டி தண்ணீர் செல்வதை நிறுத்தி விடுங்கள்" என்று மந்திரியிடம் உத்தரவிட்டார்.

ராஜா மிகுந்த பிடிவாதக்காரர் என்றும் அவரிடம் வாக்குவாதம் செய்வதில் பயனில்லை என்றும் கருதிய மந்திரி அவர் இட்டப் பணியைச் செய்ய ஒப்புக் கொண்டார்.

சில தினங்களில் அணைக் கட்டுத் தயாராகி விட்டது. நதி நீர் மலையூர்ப் பக்கம் பாய்வது நின்று விட்டது. அதனால் கோயிலூரினுள் வெள்ளம் வந்தது. சாலை, வீடு அனைத்துமே மூழ்கும் நிலைக்கு வந்து விட்டது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் நிறைந்திருந்தது.


ராஜாவின் இந்த முட்டாள்தனம் அனைத்து மக்களுக்கும் தெரியவந்தது. இருந்தாலும் அவரிடம் சென்று முறையிட தைரியம் யாருக்குமே இல்லை. கடைசியில் மந்திரியிடம் சென்று தங்களின் கவலையைத் தெரிவித்தனர். "நீங்கள் எல்லோரும் வீடு திரும்புங்கள். என்னிடம் ஒரு யோசனை



உள்ளது. அதன்படி செயல்படுகிறேன்'' என மந்திரி கூறி அனைத்து மக்களையும் அனுப்பி வைத்தார்.

அந்தக் காலத்தில் கடிகாரம் இல்லை. அரண்மனையில் மட்டும் பொதுவாக ஒரு கடிகாரம் இருந்தது. ஒவ்வொரு மணிக்கும் காவலாளி மணி அடிப்பான். அதன் மூலம் மக்கள் நேரத்தைப் பற்றித் தெரிந்து கொள்வர். மந்திரி காவ லாளியை அழைத்து, "நாமிருவரும் சேர்ந்து செயல்பட்டால்தான் மக்களின் குறையைக் களையலாம்'' என்று கூறினார். காவலாளியும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

இரவு நேரங்களில் மக்கள் மணி தெரிந்து கொள்வதற்காக அரண்மனையில் 10, 11, 12, 1, 2, 3, 4, 5, 6 என்று மணி ஒலிக்கும். 10 மணி அடித்தால் மக்கள் படுப்பதும் 6 மணி அடித்தால் மக்கள் விழித்தெழுந்து அவரவர் வேலையைச் செய்வதையும் முறையாக வைத்திருந்தனர்.



மந்திரியின் யோசனைப்படி இரவு 10 மணி முதல் 1/2 மணிக்கொரு முறை காவலாளி மணி அடித்தான். இரவு 10 மணிக்கு வழக்கம் போல் 10 மணியும் 101/2 மணிக்கு 11 மணியும், 11 மணிக்கு 12 மணியும் இப்படியே மந்திரியின் யோசனைப்படி செயல்பட்டு இரவு 2 மணிக்கு 6 மணி அடித்தான். மக்கள் விழித்தெழுந்தனர். மன்னனும் எழுந்து விட்டார். மக்கள் அவரவர் பணியைச் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் நாலா புறமும் இருள் சூழ்ந்திருந்தது.

ராஜா மந்திரியை அழைத்து, "இன்னும் பொழுது ஏன் விடியவில்லை?" என வினவினார். மந்திரி மிகுந்த பணிவுடன், "மலையூர் மக்கள் கொஞ்சம் குறும்புத் தனம் உடையவர்கள். சூரியன் எப்பொழுதும் நமக்குக் கிழக்கிலிருந்துதான் வரும். நம்மால் மலையூர்வாசிகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் சூரியனை அனுப்ப மறுக்கிறார்கள். தங்கள் உத்தரவின்படி நதியில் அணையைக் கட்டி விட்டோமே?'' என்றார்.

"ஓ! அப்படியா?" என்று ராஜா ஆச்சரியப்பட்டு, உடனே அணையைத் திறந்து விட உத்தரவிட்டார்.

அணைக்கட்டிலிருந்து நீர் செல்ல அதிகாலை ஆகி விட்டதனால் சூரியனும் புறப்பட்டது. "நாம் அணையைத் திறந்து நீரை அனுப்பியதனால் தண்ணீரைப் பார்த்த மலையூர்வாசிகளும் சூரியனை அனுப்பி விட்டார்கள்'' என மந்திரி ராஜாவிடம் கூறினார். சூரியன் கிழக்கிலிருந்து உதயமாகி வருவதை ராஜாவும் மந்திரியும் பார்த்தனர். இரு நாட்டு மக்களும் நிம்மதியடைந்தனர்.

சூரியனை மீட்டுக் கொடுத்த மந்திரியின் புத்திசாலித்தனத்தை ராஜா மிகவும் புகழ்ந்தார். அத்தோடு மட்டுமல்லாமல் அதற்கென அரண்மனையில் ஒரு விழாவும் எடுத்து மகிழ்ந்தார்.

— சிவ. மணவழகி

சுவையூட்டும் வெள்ளரிக்காய்

சாத்தூர் என்றதும் நினைவிற்கு வருவது சேவும் (இனிப்புச் சேவு, காரச் சேவு) வெள்ளரிக்காயும்தான்.

இங்கு விளையும் வெள்ளரிக்காயின் ருசியே தனிதான். வெள்ளரிக்காய் வியாபாரம் சாத்தூரிலிருந்து வடக்கே, மதுரை, திருச்சி, சென்னை வரையிலும் தெற்கே கோவில்பட்டி - திருநெல்வேலி, நாகர்கோவில் வரையிலும் நடக்கிறது. அது போல் சாத்தூர் சேவுக்கு நல்ல மதிப்பு உண்டு. வெளியூர் எங்கே கிளம்பினாலும், சேவுதான் முக்கியமாக வாங்கிச் செல்வார்கள்.



'வேற்றூர் அரிசியும் விறகும் உண்டானால் சாற்றூரைப் போலுண்டோ சௌகரியம்' என்ற பழமொழி சாத்தூருக்கு உண்டு.

நகரையொட்டி வைப்பாறு ஓடுவதால் குடிநீருக்கு அவ்வளவாகப் பஞ்சம் கிடையாது.

சாத்தூரில் முக்கிய தொழில் தீப்பெட்டி ஆகும். இத் தொழிலை வைத்து நடுத்தர குடும்பங்கள் ஜீவனம் நடத்துகின்றன.

பேனா நிப்பு தயாரிக்கும் தொழில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தது. இங்கு தயாரிக்கும் நிப்புகளை வாங்கி வடக்கே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். தற்போது அந்த அளவுக்கு வியாபாரம் கிடையாது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பஸ் டிக்கெட் இங்கே அச்சடிக்கப்படுகிறது.

பெண்களுக்கான மேனிலைப் பள்ளி ஒன்றும் ஆண்களுக்கான மேனிலைப் பள்ளி இரண்டும் எஸ்.ஆர். நாயுடு ஞாபகார்த்த கல்லூரி ஒன்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் பலவும் இங்கு உள்ளன.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சாத்தூர் சட்டமன்றத் தேர்தலில் மூன்றுமுறை வெற்றி பெற்ற பெருமை சாத்தூருக்கு உண்டு.

சென்னை, திருச்சிக்கு அடுத்த படியாக நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே பாதாள சாக்கடைத் திட்டம் காமராஜர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

நகரின் மத்தியில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ தேவாலயம் நகருக்கு அப்பால் எங்கிருந்து பார்த்தாலும் மிகவும் அழகாகக் காட்சியளிக்கும்.

மாரியம்மன், பத்திரகாளியம்மன், விநாயகர், முருகன், அனுமார், சிவன், வெங்கடாசலபதி ஆகிய திருக்கோயில்கள்

தெய்வ வழிபாட்டுக்கு அமைந்தவையாகும்.

வெங்கடாசலபதிக்கு சாற்றூரப்பன் என்ற பெயர் உண்டு. அதுவே நாளடைவில் 'சாத்தூர்' என்று விளங்கியதாக வரலாறு கூறுகிறது. ஆனி மாதம் தேரோட்டமும் சித்திரை மாதம் அழகர் வைப்பாற்றில் இறங்குவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

நகரிலிருந்து எட்டு கிலோமீட்டர் தூரத்தில் வைப்பாற்றின் கரையில் அமைந்துள்ள இருக்கன்குடி ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் மிகவும் பிரசித்தி வாய்ந்தது. கோவில் திருவிழா ஆடி கடைசி வெள்ளியன்று லட்சக்கணக்கான பக்தர்கள் அம்மனை தரிசிப்பார்கள்.

மெயின் ரோட்டில் ஊருக்கு வடக்கே அமைந்துள்ளது சின்னப்பர் கிறிஸ்துவ ஆலயம். இங்கு கிறிஸ்தவர் மட்டும் அல்ல, இந்துக்களும் சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்களும் நின்று மெழுகுவர்த்தி ஏற்றி வழிபடுவது சற்று வித்தியாசம் எனலாம்.

முத்துநகர் எக்ஸ்பிரஸ், கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ், நெல்லை எக்ஸ்பிரஸ் மற்றும் சாதாரண ரயில்களும் சாத்தூர் வழியாகச் செல்வது பிரயாணிகளுக்கு வசதி!

சாத்தூர் வெள்ளரிக்காயை ரசித்துச் சாப்பிடவும், சாத்தூர் காராச்சேவை ருசித்துச் சாப்பிடவும், தீப்பெட்டி தொழிற்சாலையைப் பார்வையிடவும் ஒருமுறை சாத்தூருக்கு வாருங்கள்!


செ. சரவணக்குமார்,
எஸ்.ஆர். நாயுடு ஞாபகார்த்த கல்லூரி,
சாத்தூர்.

எங்கள் ஊருக்கு வாருங்கள்!

தோழர்களே! பிறந்த மண்ணின் பெருமையைக் காட்ட நான் வாழும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உங்களை, அழைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புதுக்கோட்டை கிராம மணமும் நகர நாகரிகமும் கலந்தது. தொண்டைமான் புதுக்கோட்டை என்ற சிறப்புப் பெயரும் உண்டு. சுதந்தரத்திற்கு முன் தொண்டைமான்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களின் சில பகுதிகளை ஒன்றிணைத்து 1974 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் உருவானது.

இங்கிலாந்து மகாராணி எலிசபெத் புதுக்கோட்டை வந்த பொழுது அதன் நினைவாகக் கட்டப்பட்ட, மணிக்கூண்டு அருகில் உள்ள வளைவு நம்மை வரவேற்கும் நுழைவாயில். தொண்டைமானின் அரண்மனை தற்சமயம் கலெக்டர் அலுவலகமாகச் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள மியூசியம், மாணவர்கள் கண்டு பயன் பெறும் அபூர்வ பொக்கிஷம். 1103 துவக்கப்பள்ளிகளும் 182 நடுநிலைப் பள்ளிகளும் 91 உயர் நிலை பள்ளிகளும் 52 மேனிலைப் பள்ளிகளும் 9 கல்லூரிகளும் உண்டு. 52 மேனிலைப் பள்ளிகளில் ஒன்றாகிய, அரசு முன்மாதிரி மேனிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும்



மாணவன் நான் என்பதில் பெருமை யடைகிறேன்.

முதல் மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணி முத்துலெட்சுமி ரெட்டியும் தியாகி சத்தியமூர்த்தியும் பிரபல நடிகர் பி.யூ.சின்னப்பாவும் ஜெமினி கணேசனும் பிறந்த பெருமை பெற்ற மாவட்டம் எங்கள் புதுக்கோட்டை.

இங்கு பல சுற்றுலாத் தலங்களும் உண்டு. அவற்றில் முக்கியமான்வை விராலி மலை, சித்தன்னவாசல், திருமயம், குடுமியான்மலை, நார்த்தா மலை, ஆவுடையார்கோயில்.

விராலிமலை முருகன் கோவில் பேர் பெற்ற திருத்தலமாகும். மயில்கள் அதிக முண்டு.

சித்தன்னவாசலில் அஜந்தா குகைச் சித்திரங்களுக்கு இணையான ஓவியமும் பல்லவர்காலச் சிற்பங்களும் சமணர் களின் குகைக் கோவிலும் உண்டு. இங் குள்ள குன்றைச் சார்ந்த இடங்கள் வர லாற்றுக்கு முற்பட்ட இடுகாடுகள் நிறைந்தது.

குடுமியான் மலை: இங்குள்ள சிவன் கோவில் சிற்பங்களுக் கும் கல்வெட்டுகளுக்கும் புகழ் பெற்றது.

நார்த்தாமலை: இக் கிராமத்தில் விஜயாலய சோழீசுவரமும் சுற்கோவில் ஒன்றும் காணத் தக்கவை.

திருமயம்: மலையைக் குடைந்து கட்டப்பட்ட பள்ளிகொண்ட பெருமாள் கோவில் விஷ்ணு தலங்களில் பிரசித்தி பெற்ற ஒன்று. ஊமையன்கோட்டை மதில்களும் பீரங்கியும் வரலாற்றுக்குச் சான்று.

ஆவுடையார்கோவில்: ஒரே கல்லில் செதுக்கப்பட்ட தூண்கள், சிற்பங்கள், கல் சங்கிலி அக்கால கலை நுணுக்கங் களுக்குச் சான்று. இத்தனை பெருமை வாய்ந்த பல இடங்களை உடைய எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தாங்கள் வருவதை ஆவலுடன் எதிர் பார்க்கிறோம்!

கோ. சோபன்பாபு,
மச்சுவாடி, புதுக்கோட்டை – 4.

எனது ஊர் போடி - மீனாட்சிபுரம். தேனி மாவட்டத்தில் உள்ளது. எனது ஊரில் இருந்து தேனி செல்லும் பாதையில் ஆறுமுக நயினார் திருக்கோவில் உள்ளது. இதனைத் தீர்த்தத் தொட்டி எனவும் வழங்குவர்.

இதன் சிறப்பு என்னவென்றால் இங்குள்ள ஓர் ஊற்று வருடம் முழுவதும் வற்றாத ஒன்றாகும். பம்ப் மோட்டாரில் தண்ணீர் விழுவது போல எப்பொழுதும் இந்த ஊற்றிலிருந்து நீர் வந்து கொண்டே இருக்கும். இத் தீர்த்தத்தில் குளித்து ஆறுமுகனை தரிசித்தால் துன்பம் விலகும் என்பது ஐதீகம்.




எங்கள் ஊரில் எந்தத் திருவிழாவாயினும் இத் தீர்த்தத் தொட்டியிலிருந்துதான் தீர்த்தம் எடுத்து வருவர். நாங்களும் வாரந்தோறும் இத் தலத்திற்குச் சென்று ஆறுமுகனை தரிசித்து, கொண்டு சென்ற உணவினை உண்டு மகிழ்ச்சியுடன் ஊர் திரும்புவோம்.


அண்டை ஊரில் உள்ளவர்களும் சிறப்பான நாட்களில் இங்கு வந்து குழுமுவர். நீங்களும் எங்கள் ஊருக்கு வாருங்கள். இத் தீர்த்தத்தைப் பருகுங்கள்.


மு. சுரும்பார் குழலி,
ஏழாம் வகுப்பு,
போடி - மீனாட்சிபுரம்.


ஆபத்தான ஆசை!

கதை: வாண்டுதாசன்   படம்: சசி




முனியும் சினியும்
மகிழ்ச்சியுடன் பட்டணத்தை
அடைந்தன.
"அங்கே பார் சினி!
எவ்வளவு பெரிய கட்டடம்.
இதோ நிறைய வாகனங்கள்
போகுது" என வியந்தது
முனி.
"முனி, நாம் இப்படியே
எவ்வளவு நேரம் சுற்றுவது?
தங்குவதற்கு நல்ல இடம்
பாரு" என்றது சினி.
"கவலைப்படாதே சினி. நாம் வரும்
வழியில் ஒரு பழத் தோட்டம் இருந்தது.
அங்கு தங்கினால் உணவுப் பிரச்னை
இல்லை."
"வேண்டாம் முனி. அதோ தெரியுதே
ஆஞ்சநேயர் கோயில் அங்கு தங்கலாம்"
என்றது சினி.
"கோயிலில் யாராவது எப்போதாவது
பழம் தருவாங்க. அந்தத் தோட்டத்துல
நாம் எவ்வளவு வேணும்னாலும்
சாப்பிடலாம்" என்றது முனி.
"முனி, தாத்தா சொன்னதை மறந்துட்டியா?
சாப்பாடு பிரச்னை தீர்ந்தா போதுமா?
பாதுகாப்பு வேண்டாமா?" கவலையுடன்
கேட்டது சினி.


"நீ வேணும்னா அங்கே போய் கால் வயிறும் அரை வயிறும் சாப்பிட்டுக் கஷ்டப்படு. நான் கிளம்பறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது முனி.
பழத்தோட்டத்தை அடைந்த முனி வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, படுத்துக் கொண்டது.
மறுநாள் காலை சிதறிய பழங்களையும் குரங்கையும் கண்ட தோட்டக்காரர் குரங்காட்டியிடம் முனியை ஒப்படைத்தார்.
முனி குரங்காட்டிக்கு அடிமையாகி வீதி, வீதியாக அலைந்தது.
கோயிலுக்குச் சென்ற சினியின் நிலைமையோ வேறு விதமாக இருந்தது.
பக்தர்கள் எல்லாம் சினிக்கு உணவு . பழம் கொடுத்து அன்புடன் கவனித்துக் கொண்டனர்.






சாலையைப் பயன்படுத்துவது எப்படி?

சாலையைப் பயன்படுத்தாதவர்கள் யாராவது இருக்கிறீர்களா? வீட்டை விட்டு வெளியில் வந்தாலே சாலையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். மனிதர்கள் மட்டும்தான் சாலையில் செல்கிறார்களா? சில வேளைகளில் ஆடு, மாடு, நாய் போன்ற பிராணிகளும் சாலைகளைக் கடக்கின்றன. இதில் நாய் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வேகமாகக் கடக்கும். மாடு எதற்கும் பயப்படாமல் மெதுவாக நடந்து சாலையைக் கடப்பதற்குள் சாலையில் வரும் வாகனங்களின் பாடு திண்டாட்டம் ஆகி விடும்!

பிராணிகளுக்கு சாலை விதிகள் தெரியாது! ஆனால் நமக்காகவே நாம் உருவாக்கியுள்ள சாலைப் பாதுகாப்பு விதிகளை நாம் சரியாகக் கடைப்பிடிக்கிறோமா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

விவேக், பள்ளி மாணவன். தினமும் ஏழரை மணிக்கு வீட்டை விட்டு அவசரமாகப் பள்ளிக்குக் கிளம்புவான். பத்து நிமிடம் நடந்தால்தான் பேருந்து நிறுத்தத்தை அடைய முடியும்! அவன் கிளம்பும் நேரம் நடைபாதையில் ஏராளமான மக்கள் வேகமாக நடந்து சென்று கொண்டிருப்பார்கள். விவேக்கிற்கு கூட்டத்தில் செல்வது பிடிக்காது. அத்துடன் அவன் சாலையை வேடிக்கை பார்த்துக் கொண்டு வருவதற்கும் இந்த நடைபாதையில் இடையூறு ஏற்படும். எனவே அவன் நடைபாதையை விட்டு இறங்கி, வாகனங்கள் செல்லும் சாலையில்தான் நடப்பான்! சில சமயங்களில் பேருந்து அவனை உரசியபடி செல்லவும் நேரிடும். ஆரம்பத்தில் சற்று பயந்த விவேக் இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகச் சென்று வருகிறான்.




● சாலையில் செல்லும் போது நடைபாதைகளைத்தான் பாதசாரிகள் பயன்படுத்த வேண்டும். நடைபாதை இல்லாத சாலைகளில் மிகக் கவனமாக சாலை ஓரம் நடக்க வேண்டும். தம்பி, தங்கைகளை உங்களுடன் அழைத்துச் செல்லும் போது அவர்கள் கையைப் பிடித்து, வாகனங்கள் வராத பக்கமாக அழைத்துச் செல்ல வேண்டும்.


● இருளில் செல்ல நேரிட்டால் கூடியவரை பிரகாசமான உடைகளைப் பயன்படுத்தவும். ஒளிதரும் டார்ச் அல்லது விளக்கைக் கொண்டு செல்லலாம். சாலையைக் கடக்க வேண்டும் என்றால் கடக்கக் கோடிட்டுள்ள இடத்தை உபயோகிக்க வேண்டும். அத்தகைய இடம் இல்லை என்றால் இருபுறமும் நன்றாக கவனித்து வாகனங்கள் வராத நேரம் பார்த்து சாலையைக் கடக்க வேண்டும். சாலையைக் கடக்க திடீரென ஓடக் கூடாது.

● பாதசாரிகள் நடந்து செல்லும் நடைபாதைகளை பொதுமக்களும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.


ஜேம்ஸ் சென்னையில் மக்கள் நெருக்கம் அதிகமுள்ள பகுதியில் வசிக்கிறான். அந்தப் பகுதியில் விளையாடுவதற்கென்று தனியாக இடம் எதுவும் இல்லை. பாவம் ஜேம்ஸ் மற்றும் அவன் நண்பர்கள்! அவர்கள் என்ன செய்வார்கள்? பேருந்து, கார் என எந்நேரமும் பிஸியாக இருக்கும் சாலைதான் விளையாட்டுத் திடலாக பயன்பட்டு வருகிறது! கிரிக்கெட், கில்லி, கோலிகுண்டு, பம்பரம் என சீசனுக்கு ஏற்றாற்போல் விளையாட்டு மாறினாலும் அவர்கள் விளையாடும் இடத்தை மாற்றுவதில்லை. பலரும் இதுபற்றி அவனிடம் எடுத்துக் கூறினாலும், "இப்படி விளை







யாடறதுலதான் த்ரில்லே இருக்குது'' என்கிறான் ஜேம்ஸ்.



● விளையாட்டு மைதானமாக சாலையைப் பயன்படுத்துவது தவறு. அதே போல் சாலையில் கடை வைப்பது, பந்தல் போட்டு ஸ்பீக்கரை அலறவிடுவது, வாகனங்களை நிறுத்தி வைப்பது போன்ற செயல்களும் போக்குவரத்திற்கு இடையூறுகளே! சாலையைப் போக்குவரத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ரயில்வே கிராசிங் அருகில்தான் ப்ரியாவின் வீடு. தினமும் ரயில்வே கிராசிங்கைக் கடந்துதான் எங்கும் செல்ல வேண்டும். ரயில் வரும் நேரங்களில் பாதையை அடைக்க கேட் இருக்கும். கேட்டை மூடும் நேரங்களில் சிவப்பு விளக்கு எரிந்தபடி மணி ஓசையும் கேட்கும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ப்ரியா ஒருபோதும் விதியை மீறிச் செல்ல நினைக்க மாட்டாள். கேட் மூடியிருக்கும் நேரம் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்களில் வருவோரும் பாதசாரிகளும் கேட்டின் கீழ் குனிந்து சென்று வேகமாக ரயில் பாதையைக் கடப்பார்கள். இது மிகவும் ஆபத்தானது! ப்ரியாவைப் போல் சிறிது நேரம் காத்திருந்து செல்வதுதான் நமக்கு நல்லது.

● ரயில்வே கேட், சிக்னல் இல்லாத இடங்களில் இருபுறமும் பார்த்து ரயில் வரவில்லை என உறுதிப்படுத்தியபின் கவனமாகச் செல்ல வேண்டும்.

● ரயில் பாதையில் அல்லது ரயில் பாலத்தில் ஒருபோதும் நடந்து செல்லக் கூடாது!

ரகுவிற்கு சைக்கிள் என்றால் ப்ரியம் அதிகம். கடைக்கோ, பள்ளிக்கோ சைக்கிளில் செல்லும் போது, ஆகாயத்தில் பறப்பதாக நினைத்துக் கொள்வான். மிக வேகமாக ஓட்டுவதுடன் ஏதாவது பெரிய வாகனங்களை முந்த வேண்டும் என்றும் நினைப்பான். சைகை காட்டாமல் திடீரென சாலையைக் கடக்க முற்படுவான். இதனால் பல வாகன டிரைவர்களிடம் அர்ச்சனை வாங்கியிருக்கிறான்.

சில சமயங்களில் ரகுவிற்கு தாராள குணம் தலைகாட்டும். தனது நண்பர்கள் மூவரை முன்னாலும் பின்னாலும் உட்கார வைத்து, பாதையைக் கவனிக்க இயலாமல் தடுமாறியபடி பேசிக் கொண்டே செல்வான்.

● சைக்கிளில் இருபக்கமும் பின்வரும் வண்டிகளைப் பார்க்க வசதியாக கண்ணாடி இருக்க வேண்டும்.

● பெரிய சுமைகளை முன்புறமோ, பின்புறமோ வைத்துச் செல்லக் கூடாது.

● இரவில் செல்லும் போது கண்டிப்பாக விளக்கு எரிய வேண்டும். பின்புறம் பிரதிபலிக்கும் சிவப்பு வில்லை இருப்பது அவசியம்.

● ஒருபோதும் சைக்கிளை நடைபாதையிலோ, சாலையின் எதிர்பக்கமாகவோ ஓட்டிச் செல்லக் கூடாது.

● சைகை காட்டும் சமயம் தவிர மற்ற நேரங்களில் இரு கைகளும் கைப்பிடியில் இருக்க வேண்டும். சைக்கிள் ஓட்டுவது சர்க்கஸ் விளையாட்டல்ல.

● உங்கள் உயரத்திற்கு மிக அதிகம் அல்லது குறைந்த உயரமுள்ள சைக்கிளை ஓட்டக் கூடாது. அது ஓட்டுவதற்கான நிதானத்தைக் குறைத்துவிடும்.


● மூன்று, நான்கு சைக்கிள்கள் அருகருகே சாலையை அடைத்துக் கொண்டு செல்லக் கூடாது.

● சைக்கிளில் செல்லும் போது வேறு எந்த வாகனத்தையும் பிடித்துக் கொண்டு செல்லக் கூடாது.

சைக்கிள் மட்டும் செல்ல தனிப் பாதை உள்ள இடத்தில் அதில்தான் கட்டாயம்

செல்ல வேண்டும்.

வசந்த் பள்ளியில் படிக்கும் வரை பேருந்தில் மிக ஜாக்கிரதையாகப் பயணம் செய்ததுண்டு. ஆனால் இப்போது அவன் கல்லூரி மாணவனாகி விட்டான். எனவே படிக்கட்டுகளில் தொங்கிக் கொண்டு பயணம் செய்வதுதான் சிறந்த கல்லூரி மாணவனுக்கு அழகு என்ற கருத்தில் அவனுக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அவன் மற்றவர்களைப் போல் அடித்துப் பிடித்து ஏறுவதில்லை. பேருந்து கிளம்பிய பின் ஓடி



வந்து படிக்கட்டில் ஒருகாலும் வெளியில் ஒரு காலை நீட்டியபடியும் செல்வான்.

● பேருந்திற்காகக் காத்திருக்கும் போது நடைபாதையில் தள்ளி நிற்க வேண்டும். பேருந்திலிருந்து இறங்குபவர்கள் இறங்கிய பின்தான் ஏற வேண்டும்.

● 'படியில் பயணம் நொடியில் மரணம்'- என்ற வாசகம் பயமுறுத்துவதற்காக எழுதப்பட்டதல்ல. உண்மையும் கூட. பேருந்து ஓட்டுனரிடம் பேசிக் கொண்டு செல்லக் கூடாது. அது அவர் கவனத்தை சிதைக்கும்.

● பேருந்து, கார், ரயில் போன்ற எந்த வாகனங்களில் சென்றாலும் தலையை, கைகளை வெளியே நீட்டக் கூடாது.

● காரிலிருந்து வெளியே வரும் போது நடைபாதைப் பக்கம் உள்ள கதவை உபயோகிக்கவும்.

● கார் கதவின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு செல்லக் கூடாது. திடீரென கதவு திறந்தால் ஆபத்தில் முடியலாம்!

சிறுவர்கள் மட்டும்தான் சாலை விதிகளை மீறுகிறார்களா? ம்...ஹூ'ம்! சாலை விதிகளை மீறுவதில் பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடே கிடையாது.

முரளி குடும்பத் தலைவர். அவருக்கு மூன்று குழந்தைகள். வெளியில் எங்காவது செல்ல வேண்டும் என்றால் பேருந்து வசதிப்படாது. கூட்ட நெரிசல், நேரம் வீண் எனப் பல பிரச்னைகள். ஆட்டோவில் செல்லலாம் என்றால் மீட்டருக்கு மேல் பணம் கொடுத்து கட்டுப்படியாகாது. எனவே தம்மிடம் உள்ள ஸ்கூட்டரிலேயே குடும்ப உறுப்பினர் ஐந்து பேரும் செல்வது அவரைப் பொறுத்தவரை திருப்தியான விஷயம்.

ஸ்கூட்டரில் முன்புறம் நிற்கும் பெண்ணைக் குனிந்து கொள்ளச் சொல்வார். அவருக்கும் மனைவிக்கும் இடையில் மகன் நசுங்கியபடி உட்கார்ந்திருப்பான். மனைவி கையில் ஒரு குழந்தையைப் பிடித்தபடி உட்கார்ந்திருப்பார். அவரால் கைப்பிடியைப் பிடிக்கவும் இயலாது. பிடிக்க முயற்சிப்பதும் இல்லை. முக்கியமாக யாரும் ஹெல்மெட் அணிவதில்லை. இவர்கள் சாலையில் செல்லும் போது வேடிக்கையாகவும் திகிலாகவும் மற்றவர்களுக்குத் தோன்றும்.

இதே போல் பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் ரிக்ஷாவிலும் ஆட்டோவிலும் அளவுக்கதிகமாக ஏற்றுவது ஆபத்தாகத்தான் பல சமயங்களில் முடிகிறது.

● இருசக்கர வாகனங்கள், ஆட்டோ, ரிக்ஷாக்களில் குறிப்பிட்ட அளவு ஆட்களைத்தான் ஏற்ற வேண்டும். இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது கண்டிப்பாக ஹெல்மெட் அணிய வேண்டும்.

சாலை விதிகளைத் தெரிந்து கொண்டு அதை உறுதியாகவும் கவனமாகவும் கையாண்டால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

சிறுவர்களாகிய நீங்கள் இப் பழக்கத்தை இப்போதிருந்தே மேற்கொண்டால் பெரியவர்களானாலும் கடைப்பிடிக்கத் தோன்றும்! அதற்குப் பிறகாவது விபத்துகள் குறையும்!

நன்றி : **தென்னிந்திய ஆட்டோ மொபைல் அசோசியேஷன், இந்திய சாலைப் போக்குவரத்து அபிவிருத்தி அசோசியேஷன் வெளியீடு.**

அட்டையில் : ஸ்கூட்டரில் எப்படி பயணம் செய்யக் கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டாக அம்மா, அப்பாவுடன் **ரோஹித், ஸ்ருதி, ரோஷிணி**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

அரிச்சந்திரன் செய்த

பொய்யே பேசாதவன் அரிச்சந்திரன். அவன் வெகு காலம் குழந்தை இல்லாமல் வருந்தினான். வருணனைக் குறித்து தவம் செய்தான். வருண பகவான் தோன்றி, "நரமேதயாகம் செய்வதானால் புத்ர பாக்கியம் கிடைக்கும்" என்றார்.

அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டான் அரிச்சந்திரன். ஒரு வருஷத்தில் லோகிதாசன் பிறந்தான்.

குழந்தை பிறந்த பத்தாம் நாள் வருணன் வந்தான். "யாகம் ஆரம்பிக்கவில்லையா?" என்று கேட்டான்.

"தீட்டுக் கழியட்டும்" என்றான் அரிச்சந்திரன்.

ஒரு மாதம் கழித்து வந்தான் வருணன்.

"வருணா! குழந்தை பிறப்பது எதற்கு? அதன் மழலை மொழி கேட்க வேண்டாமா? அந்தக் குழந்தையை நாங்கள் கொஞ்சி விளையாட வேண்டாமா? கொஞ்ச காலம் இங்கு வராதே!" என்று வேண்டினான் மன்னன்.

வருணனும் மௌனமாகத் திரும்பினான்.

லோகிதாசன் தளர் நடைபயின்று கல்வி கற்கவும் ஆரம்பித்து விட்டான்.

அப்போது வந்தான் வருணன்.

"உபநயனம் செய்யாத பிள்ளையை யூபஸ்தம்பத்தில் கட்டக் கூடாதென்று சான்றோர்கள் கூறுகிறார்கள். அடுத்த வாரம் உபநயனம் செய்து விடுகிறேன்" என்று வருணனை அனுப்பினான் அரிச்சந்திரன்.

விவரம் புரிந்த லோகிதாசன் தந்தையிடம், "இவர் யார்? எதற்காக என்னை யூபஸ்தம்பத்தில் கட்டப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அரிச்சந்திரன் மழுப்பிப் பார்த்தான். எதற்கும் லோகிதாசன் மசியவில்லை. அரண்மனையை விட்டு ஓடி விடுவதாக அடம்பிடித்தான். வேறுவழியின்றி நடந்தது நடந்தபடி கூறினான் மன்னன்.

"தந்தையே! ஆராய்ந்து பார்க்காமல் ஒருவருக்கு வாக்குத் தரலாமா? கண்ணை விற்று சித்திரம் வாங்கும் மூடனாகலாமா? மலடு என்ற குறைநீங்கி விட்



டதே! உங்கள் சத்தியத்துக்கு என்னைப் பலியிடுவது என்ன நியாயம்?" என்று கேட்டான் லோகிதாசன்.

அரிச்சந்திரன் எதுவுமே பேசவில்லை.


தவறு!

முடிந்தவரை சமாளிப்போம் என்று எண்ணினான்.

ஆனால் மறுநாள் லோகிதாசனை அரண்மனையில் காணவில்லை. நாலாபுறமும் ஆட்களை அனுப்பி தேடச் சொன்னான். லோகிதாசன் எவர் பார்வையிலும் படாமல் அடர்ந்த காட்டில் மறைந்து வாழ்ந்தான்.

இந்தச் சமயம் வருணன் வந்தான்.

"அரிச்சந்திரா! நீ என்னை ஏமாற்றுகிறாய்! ஒவ்வொரு முறையும் புதுப்புது சாக்குச் சொல்லி என்னைத் திருப்பி அனுப்புகிறாய்! இனி நான் ஏமாற மாட்டேன். இப்போதே யாகத்தைத் தொடங்கு" என்றான்.




அரிச்சந்திரன் சோகத்துடன் மகன் காணாமல் போனதைத் தெரிவிக்க, வருணன் ஆத்திரம் கொண்டு, "இதுவும் உன் சூழ்ச்சிதான்! நான் நம்ப மாட்டேன். என்னை மோசம் செய்த நீ ஜலோதரத்தால் அவதிப்படுவாயாக!" என்று சபித்து விட்டுப் போய் விட்டான்.

அரிச்சந்திரனுக்கு அபார தாகம் எடுத்தது. தண்ணீர் குடித்தால் வயிறு வீங்கியது. சிறுநீர் சரியாகக் கழியாமல் வயிறு குத்தலெடுத்தது. பசிக்கிறது ஆனால் சாப்பிட முடியவில்லை.

இந்தச் செய்தியை வழிப்போக்கர்கள் மூலமாகக் கேள்விப்பட்ட லோகிதாசன், தந்தையைக் காக்க பிராணனைத் தியாகம் செய்யத் தீர்மானித்துப் புறப்பட்டான்.

அதை அறிந்த இந்திரன் அந்தண வடிவெடுத்து, "லோகிதாசா! மானிடராய் பிறப்பது அரிது என்பதை நீ படிக்கவில்லையா? உன் தந்தை நோயின் கொடுமை தாங்காமல் உன்னைப் பலியிட்டு யாகம் நடத்தி விடுவான். அதனால் உனக்கென்ன பயன்? உன் பெயர் நிலைக்க இப் பூலோகத்தில் நீ செய்த சாதனை என்ன? நீ இதிலிருந்து காப்பாற்றி விட்டால் அரிச்சந்திரனுக்கு மரணமே வராதா?" என்றெல்லாம் கூறவும் லோகிதாசன் முன்போலவே மலைக் குகைக்குத் திரும்பினான். இப்படி லோகிதாசன் மனம் மாறிய போதெல்லாம் இந்திரன் தடுத்துக் கொண்டிருந்தான்.

ஆர். பொன்னம்மாள்



''உங்க தீவனத்தை பசுமாட்டுக்குக் கொடுத்தா படிப்படியா கறக்கும்னு சொன்னீங்க. அப்படி கறக்கலியே!''

''உடனே கறந்துடுமா? 'படிப்படி'யாத்தான் கறக்கும்!''

– புதுப்பேட்டை இராமலிங்கம்

இந்திரனுக்கு யார் யாகம், தவம் செய்தாலும் பிடிக்காது. இடையூறு விளைவித்துக் கொண்டேயிருப்பான்.

அரிச்சந்திரனுடைய உபாதையோ தாங்க முடியாததாக இருந்தது. குலகுரு வசிஷ்டரிடம் இதற்கு நிவாரணம் சொல்லும்படி வேண்டினான்.

''விலைக்கு வாங்கிய பிள்ளையும் புத்திரனுக்கு நிகராவான். நிறையக் குழந்தைகளைப் பெற்ற தரித்திரர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டு பிள்ளையை விற்பார்கள். நாடெங்கும் தண்டோரா போடச் செய். லோகிதாசன் வயதுள்ள ஒரு அந்தணப் பிள்ளைய்ய வ்ாங்கி நரமேத யாகத்தை நடத்தி வருணனைத் திருப்தி செய்தால் உன் வியாதி நீங்கும்'' என்றார் வசிஷ்டர்.

அரிச்சந்திரன் அப்படியே ஆணையிட்டான்.

அஜுகர்த்தன் என்பவனுக்கு மூன்று பிள்ளைகள். மிகுந்த துன்பத்தில் இருந்தான் அஜுகர்த்தன்.

தண்டோராச் செய்தியைக் கேட்டதும் அஜுகர்த்தன் மகிழ்ந்தான்.

"மூத்த பிள்ளையை நான் தர மாட்டேன்'' என்றான்.

"கடைசிப் பிள்ளையை நான் இழக்க முடியாது'' என்றாள் அவன் மனைவி.

நடுவிலுள்ள சுனச்சேபனை பணத்துக்கு விற்று விட முடிவு கட்டி மந்திரியிடம் ஒப்படைத்து ஏராளமான பொருளைப் பெற்றுக் கொண்டனர்.

நரமேதயாகம் தொடங்கப்பட்டது. சுனச்சேபனை குளிப்பாட்டி யூபஸ்தம்பத்தில் கட்டினர். சுனச்சேபன் ஆட்டைப் போல் தன்னைக் கட்டி வைத்திருப்பதைக் கண்டு தன்னை வெட்டி, எரியும் நெருப்பில் போடப் போகிறார்கள் என்று புரிந்து கொண்டு கதறி அழுதான். அரிச்சந்திரனுக்கும் இரக்கமாய்தானிருந்தது. ஆனாலும் அவனால் நோயின் கடுமை தாங்க முடியவில்லை. அதனால் மௌனமாய் இருந்தான்.

அப்போது விசுவாமித்திர முனிவர் அங்கு வந்தார். ''மன்னா! இந்தச் சிறுவனின் அலறல் உன் மனதை இளக்கவில்லையா? ஜலோதரத்தால் இறந்து விடுவோமென பயந்து உயிரைக் காத்துக் கொள்ள இந்தக் கொடிய செயலில் இறங்கினாயா? அந்தப் பாலகனும் உயிரைக் காத்துக் கொள்ளவே ஓலமிடுகிறான். இரண்டு உயிரில் எந்த உயிர் உயர்ந்தது? இவனைக் கொன்று யாகம் செய்தும் உன் நோய் குணமாகவில்லை என்றால் ஒரு உயிரைக் கொன்ற பாவம் உன்னைச் சேராதா? பஞ்சமகா பாவங்களில் முதன்மையானது கொலை செய்வது. யாக சமயங்களில் யார் எதைக் கேட்டாலும் தரவேண்டும். நான் இந்தப் பிள்ளையைத் தானமாகக் கேட்கிறேன்; தா'' என்றார்.

அரிச்சந்திரன் சங்கடத்துடன், ''வேறு எது வேண்டுமானாலும் கேளுங்கள். தருகிறேன். சுனச்சேபனை மட்டும் தர முடியாத நிலையில் இருக்கிறேன்'' என்றான்.

பையனைக் கொல்ல கொலை வாளோடு நின்ற சாமித்ரன், "அழும் பிள்ளையை வெட்ட மாட்டேன்" என்று கத்தியைப் போட்டு விட்டுப் போய் விட்டான்.

இதைப் பார்த்த அரிச்சந்திரன் மனம் மாறி அஜுகர்த்தனிடம், "உன் பிள்ளை ரொம்ப அழுகிறான். இவன் வேண்டாம். நான் கொடுத்த நூறு பசுக்களையும், பொன்னையும் திருப்பிக் கொடு" என்று பாய்ந்தான்.

அதனால், ''அரசே! இன்னும் ஒரு நூறு பசுக்களைக் கொடுப்பதானால் நானே சாமித்திரன் வேலையைச் செய்து விடுகிறேன்" என்றான் அஜுகர்த்தன்.

இதைக் கேட்ட விசுவாமித்திரர் மனம்

வெதும்பினார். யூபஸ்தம்பத்தில் கட்டப் பட்டிருந்த சுனச்சேபன் அருகில் சென்று, "குழந்தாய்! அழுவதால் ஆவது ஒன்று மில்லை. எந்த நேரத்திலும் தைரியத்தை இழக்கக் கூடாது. தந்தை கை விட்டால் வேந்தன் காப்பாற்றுவான். இங்கே உன்னை இருவரும் கைவிட்டு விட்டார்கள். இதற்கு மூலகாரணமான வருண மந்திரத்தைச் சொல்லித் தருகிறேன். நம்பிக்கையோடு கண்களை மூடிக் கொண்டு ஜபித்துக் கொண்டிரு. உன்னைச் சுற்றி எது நடந்தாலும் ஜபத்தை நிறுத்தாதே" என்று கூறி வருண மந்திரத்தை உபதேசித்தார்.

சுனச்சேபனும் அழுவதை நிறுத்தி விட்டு உறுதியோடு வருண மந்திரம் ஜபித்தான். யாகம் தொடர்ந்தது. அஜுகர்த்தன் வெட்டுக் கத்தியோடு நின்றிருந்தான்.

யாகசாலையிலுள்ள அனைவரும் பரிதாபத்தோடு சுனச்சேபனைப் பார்த்தனர்.

திடீரென ஒரு மின்னல்! வருண தேவன் தோன்றினான். சுனச்சேபனின் கட்டுக்களை அவிழ்த்தான். அரிச்சந்திரனின் வயிறு வீக்கம் மறைந்தது.

"அரிச்சந்திரா! துன்பத்தை நீ அனுபவிக்கும் காலம் வரும். பிறர் வேதனையை அறியாத நீ இதற்கெல்லாம் தண்டனையாக வேதனைக் கடலில் மூழ்குவாய்! சுனச்சேபனை வெட்ட உத்தர விட்ட நீ வெட்டுக் கத்தியோடு புத்திரன் பிணத்தின் முன் மனைவியை வெட்டும் நிர்ப்பந்தம் நேரிடும்.

"சாகப் பயந்து மலைக்குகையில் ஒளிந்திருக்கும் லோகிதாசன் நச்சரவம் தீண்டிப் பிணமாவான். பாம்புகள் வாழும் காட்டில் மறைந்திருப்பதால் தர்ப்பை அறுக்கும் செயலை உன் பிள்ளை செய்வான். இப்படிப்பட்ட பிள்ளையையும் புருஷனையும் அடைந்த சந்திரமதி அடிமையாய் வேலை செய்வாள்.

"நீ லோகிதாசனைக் கொன்று நரமேத யாகம் செய்யத் துணிந்திருந்தால் இப்போது போல் அப்போது அவனை விடுவித்திருப்பேன். சத்தியம் தவறியதால் உலகப் பழிக்கு ஆளாகித் துன்பத்தை அனுபவித்தாய்!

"சத்தியம் உயிரை விடப் பெரியது என்பதை உறுதியாகக் கொண்டு விதியை எதிர்நோக்கினால் சரித்திரத்தில் அழியாப் புகழ்பெறுவாய்! உன் மாசு நீங்கும்" என்றார் வருண தேவன்.

சுனச்சேபனை விசுவாமித்திரர் தன்னோடு அழைத்துச் சென்று அன்புடன் வளர்த்து கல்வி போதித்தார். அரிச்சந்திரன் தன் பேச்சைக் கேளாத கோபம் விசுவாமித்திரர் நெஞ்சிலே கனன்று கொண்டிருந்ததால் அவனைச் சோதனைக்குள்ளாக்கினார். அரிச்சந்திரனும் சந்திரமதியும் லோகிதாசனும் பொறுமையாய் விதியை ஏற்றுக் கொண்டு சத்தியம் தவறாது நடந்து புகழ்பெற்றனர்.


பேர் சொல்லும் பறவை

தலையைத் தூக்கி ஆடி ஆடித்
தரையின் மீதும் நடக்கும்!
அலையின் மீதும் ஓடம் போல
அசைந்து நீந்திக் கடக்கும்!

தவளை நான்கு நத்தை மீன்கள்
தானி யங்கள் புசிக்கும்!
கவலை யின்றி குட்டை ஏரிக்
கரையை அண்டி வசிக்கும்!

கழுத்தை வளைத்துச் சிறகுள் நுழைத்துக்
கண்கள் உறங்கப் பிடிக்கும்!
குலத்தை வளர்க்கக் குஞ்சை அடையில்
கோழி பொரித்துக் கொடுக்கும்!

மூத்த தமிழில் தனது பெயரை
மூச்சு இருக்கும் வரைக்கும்



'வாத்து – வாத்து' என்று அகல
வாயைத் திறந்து உரைக்கும்!

– தளவை. இளங்குமரன்



ஆந்தை நமக்கு நண்பனா?

அச்சம் ஏற்படுத்தும் இப் பறவையின் அலறல் சத்தத்தை சிலர் கேட்டிருக்கலாம். பேய், பிசாசு திரைப்படங்களிலும், திகிலூட்டும் காட்சிகளைக் காண்பிக்கும் போதும் இந்த அலறல் சத்தத்தை ஒலிக்கச் செய்வார்கள். இதைக் கேட்கும் போது அச்சம் அதிகம் ஏற்படும். இந்தப் பயமுறுத்தும் அலறலுக்குச் சொந்தக்காரர் 'ஆந்தை'யார்தான்!

இரவு நேரங்களில் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து இரை தேடும் பறவைகளில் ஆந்தைகள் முக்கியமானவை. இருளிலும் மங்கிய வெளிச்சத்திலும் வேட்டையாடி வாழ வேண்டிய சூழ்நிலை ஆந்தைகளுக்கு. ஏனென்றால் பகல் நேரங்களில் ஆந்தையின் கண்கள் கூசும். இரவு நேரங்களில் மட்டும்தான் மிகத் துல்லியமாகப் பார்க்கக்கூடிய சக்தி உண்டு.

இவற்றின் தலை உருண்டையாக இருக்கும். முகம் தட்டையானது. அதில் இரண்டு பெரிய கண்கள் காணப்படும். ஆந்தைகளுக்கும் நம்மைப் போல நேர் எதிர்ப்பார்வைதான்!



எனவே மற்றப் பறவைகளைப் போல் ஒவ்வொரு கண்ணும் ஒரு திசையைப் பார்க்க இயலாது. அடுத்த பக்கத்தைப் பார்க்க வேண்டுமானால் முகத்தைத் திருப்பித்தான் பார்க்கும். உடலை சற்றும் அசைக்காது.

தலையைச் சுற்றி பின்பக்கம் பார்க்கும் சக்தி இவற்றிற்கு உண்டு. ஆந்தையால் தலையை 180 டிகிரிக்குத் திருப்ப இயலும்.

கால்களும் நகங்களும் வேட்டையாடுவதற்கு

எஸ். சுஜாதா





மிகவும் உதவுகின்றன. நகம் மிகவும் கூர்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். கால்களால் இரையைப் பிடித்து நகத்தால் உணவைக் கிழிக்கும்.

பெரிய உடலுக்கு ஏற்றாற்போல் மிக மிருதுவான அகன்ற சிறகுகள் உண்டு. இதனால் ஆந்தைகள் பறக்கும் போது ஒலியே கேட்காது.

வேட்டையாடுவதில் மிகவும் சாமர்த்தியசாலிகள் ஆந்தைகள். இரவு நேரங்களில் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து இரையைக் கண்காணிக்கும். பார்க்கும் சக்தியும் கேட்கும் சக்தியும் அதிகமிருப்பதால் இரை வருவதை மிகச் சரியாக உணர்ந்து கொள்ளும்.



இரையைக் கண்டவுடன் மிக வேகமாகப் பறந்து வந்து கவ்விக் கொண்டு சென்று விடும். இது வரும் விதத்தை அறிய முடியாததால் இரையாகும் பிராணிகள் தப்பிக்க இயலாமல் போய் விடுகிறது.



வண்டு, பூச்சிகள், பல்லி, எலி, சிறிய முயல் போன்ற சிறு பிராணிகளும் பறவைகளும் ஆந்தைகளின் முக்கிய உணவு.



முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சு முதலில் சாப்பிடும் உணவே சுண்டெலிதான்! ஒரு பெரிய ஆந்தையின் ஒரு நாள் உணவு குறைந்தது 6 எலிகள்.

ஆந்தைகள் கூடு கட்டுவதில்லை. பெரிய மரப் பொந்துகள், இடிந்த கட்டடங்கள், இருட்டான மறைவிடங்களில் தங்குகின்றன. பகல் முழுவதும் தன் இருப்பிடத்திலேயே பொழுதைக் கழிக்கும். தப்பித் தவறி பகல் நேரங்களில் வெளிவந்தால் கண்கள் கூசுவதால் ஒன்றும் செய்ய இயலாமல் பருந்து போன்ற பறவைகளிடம் மாட்டிக் கொள்ளும். எனவேதான் இரவு நேரங்களில் மட்டுமே வெளியேறுகின்றன.

ஆந்தைகள் வசிக்கும் இடங்களைத் தரை மீதும் சுவர் மீதும் படிந்திருக்கும் வெள்ளை நிற எச்சங் களைக் கொண்டு அறியலாம். பொழுது சாய்ந்த பின் குஞ்சுகள் இரைக்காகக் கத்துவதை வைத்தும் அறிந்து கொள்ளலாம்.


பெண் ஆந்தை ஆண்டிற்கு இருமுறை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஒருமுறைக்கு 3 முதல் 8 முட்டைகள் வரை இடும். 28 லிருந்து 30 நாட்களுக்குள் முட்டைகள் பொரிந்து விடும். எல்லா குஞ்சுகளும் ஒரே நேரத்தில் முட்டையிலிருந்து வெளிவருவதில்லை. இரண்டு நாட்கள் இடைவேளையில் ஒவ்வொரு முட்டையிலிருந்தும் குஞ்சு வெளிவரும்.

முட்டையிலிருந்து வெளிவந்ததும் குஞ்சுகள் அகோரப் பசியுடன் இருக்கும். ஆண் ஆந்தை வெளியில் சென்று வேட்டையாடி உணவுகளைக் கொண்டு வரும். குஞ்சு பிறந்தவுடனே முழு சுண்டெலியை உணவாக்கிக் கொள்ளும்.

முதலில் வெளிவந்த குஞ்சு மற்ற குஞ்சுகளை விட அதிகமாக உணவு உட்கொள்ளும். எனவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெரிதாகிக் கொண்டே வரும். மற்ற குஞ்சுகள் உணவு அதிகமாகக் கிடைக்காமல் நோஞ்சான்களாகக் காட்சி தரும். உணவு பற்றாக் குறை ஏற்படும் நேரங்களில் முதலில் வந்த குஞ்சு நோஞ்சான் குஞ்சுகளை உணவாக்கிக் கொள்ளும். எல்லாக் குஞ்சுகளையும் பேணி வளர்க்க இயலாததால் தாயும் இதைக் கண்டுகொள்ளாது. உணவே கிடைக்காத காலங்களில் பெண் ஆந்தை முட்டை இடாது.

ஐந்து வாரங்களில் குஞ்சு நன்றாக வளர்ந்து விடும். எனவே இரவில் தாய், தந்தையுடன் வேட்டைக்குக் கிளம்பி விடும். குஞ்சு








நன்றாக வேட்டையாடினாலும் மூன்று மாதங்கள் வரை பெற்றோரின் கண்காணிப்பிலேயே இருக்கும்.





ஆந்தை தன் உறவினர்களை அழைக்கவே கர்ண கொடூரமாக அலறுகிறது. இந்த அலறலால் நமக்கு பயம் ஏற்படுவது உண்மை. ஆனால் ஆந்தைகளால் நமக்கு எந்த வித பாதிப்பும் கிடையாது. இதன் அலறலைப் பிடிக்காதவர்கள் கெட்ட சகுனம் என்று நினைத்து அடித்துக் கொன்று விடுகின்றனர். இது வெறும் மூடநம்பிக்கையே!

ஆந்தைகளால் நமக்கு நன்மையே! குறிப்பாக விவசாயிகளுக்கு இவை பெரிய அளவில் உதவி செய்கின்றன. வயல்களில நுழைந்து பயிர்களை வீணாக்கும் எலிகளைக் கொன்று பயிர்களைக் காக்கின்றன.

வயல்வெளிகளில் இவை உட்காருவதில்லை. எனவே வயலுக்கருகில் உள்ள மரங்களில் T வடிவ கழிகளைக் கட்டி வைத்தால் இரவில் ஆந்தை வந்து அமரும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 3, 4 கழிகள் கட்டினால் போதும். எலிகள் பெருமளவில் குறைந்து விடும். இந்தக் கழிகளை பகலில் எடுத்து விட வேண்டும். ஏனென்றால் கிளி, புறா, குருவி போன்ற பறவைகள் தங்கி பயிர்களை அழிக்கும். இரவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.




ஆந்தைக்குக் கோட்டான், கூகை, சாவுக்குருவி என்று பல்வேறு பெயர்கள் உள்ளன. இதில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் அளவிலும் நிறத்திலும் வேறுபட்டவை. அதே போல் ஒலிக்கும் குரல்களிலும் வித்தியாசம் இருக்கும்.

பெருங்கூகை என்று அழைக்கப்படும் ஆந்தைக்கு தலையின் இரு பக்கமும் கொம்புகள் போன்ற சிறகுகள் இருக்கும்.

காடுகளில் பட்ட மரங்களை அழிப்பதனாலும் மக்கள் அபசகுனமாகக் கருதுவதாலும் இவை பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டன. மண் புழுவைப் போல் விவசாயிகளுக்கு ஆந்தையும் சிறந்த நண்பன்தான்!

ஓவியப் போட்டி முடிவுகள்




முதல் பரிசு: ஜி. சுந்தரவள்ளி,
ஒன்பதாம் வகுப்பு, முத்தையா அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, கோட்டையூர்.



இரண்டாம் பரிசு: ஆர்.எஸ். திவ்யா,
எட்டாம் வகுப்பு, எம்.ஜி.ஹெச்.எஸ். பள்ளி, பொள்ளாச்சி.

ஜனவரி கோகுலத்தில் 'பொங்கல்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



மூன்றாம் பரிசு: எம். ராதிகா, புத்தூர், திருச்சி.

ஆறுதல் பரிசு: எம். ஆனந்த் பிரபாகர், ஐந்தாம் வகுப்பு, திருச்சி.






ஆறுதல் பரிசு: எஸ். பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு, எ.இ.டி. மேல் நிலைப்பள்ளி, பாயலத்தாம்பாளையம்.

தலைமை என்றால் என்ன?

எங்கள் தமிழ் ஆசிரியர் ஒவ்வொரு வார்த்தைக்கும் விளக்கம் அளித்து நன்றாகப் பாடம் நடத்துவார். அன்றும் 'தலைமை' என்ற வார்த்தைக்கு நிறைய உதாரணம் சொல்லிக் கொண்டிருந்தார். பின்னால் உட்கார்ந்திருந்த மாணவன் தூங்கி விழுவதைக் கவனித்தார் ஆசிரியர். அவனை எழுப்பி, "தலைமை என்ற வார்த்தைக்கு விளக்கம் சொல்" என்றார். உடனே அவன், "தலைமை என்பது ஹேர் டை எனப்படும்" என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரித்தது!

– ஆர். ஜெயவாணி, பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, துத்திப்பட்டு.



பெயர்?

எங்கள் வகுப்பில் புதிதாக ஒரு மாணவன் வந்து சேர்ந்தான். உணவு இடை வேளையின் போது எல்லோரும் அவனைச் சுற்றி நின்று கொண்டு எந்த ஊர்? எப்படி படிப்பே? எனக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தோம். திடீரென பக்கத்து வகுப்பு மாணவன் வந்து, "உன் பேர் என்ன?" என்று கேட்டான். உடனே அவன், "என் பேர் பாலகிருஷ்ணன். பாலு, பாலுன்னு கூப்பிடுவாங்க" என்றான். "பாலு, பாலுன்னு ரெண்டு தடவை கூப்பிட்டால் தான் திரும்புவியா? ஒரு தடவை கூப்பிட்டால் போதாதா?" என்றான். எல்லோரும் சிரித்தோம். "ஒரு பேச்சுக்குச் சொன்னேன்" என்றான் புது மாணவன்.

– ந. சௌந்தர், தாரமங்கலம்.

சூப்பர் ஸ்டார்!

ஆசிரியர் நட்சத்திரங்களைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். அது மிகுந்த ஒளி உடையது" என்றார். பாடத்தைக் கவனிக்காமல் இருந்த ஒரு மாணவனை எழுப்பி, "ஸ்டாரிலே சூப்பர் ஸ்டார் எது?" என்று கேட்டார். அவன் சட்டென, "ரஜினி காந்த்" என்றான் சந்தோஷத்துடன். "இப்ப ரஜினி சினிமா வைத்தான் நினைச்சிட்டிருந்தியா?" என்றார் கோபத்துடன் ஆசிரியர். "சார் பாடத்தைத்தான் கவனித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் தமிழில் கேட்டிருந்தால் சரியாகச் சொல்லியிருப்பேன். ஆங்கிலத்தில் கேட்டதால் என்னை மறந்து கூறிவிட்

டேன்" என்றான்.

– கு. சுபா, பதினோராம் வகுப்பு, திருச்சி.

என்ன காலம்?

ஆசிரியர் காலங்களைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பிறகு ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லி வரிசையாக மாணவர்களை என்ன காலம் என்று கேட்டுக் கொண்டே வந்தார். இடையில் கோபி என்ற மாணவன் தூங்குவதை கவனித்து விட்டார். "கோபி தூங்குகிறான்" என்றார் கோபத்துடன். சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாத ஒரு மாணவன், "இது நிகழ்காலம் சார்" என்றான். நாங்கள் சிரிக்க ஆசிரியர் பிரம்புடன் கோபியை நோக்கிச் சென்றார். இதைப் பார்த்த என் நண்பன், "கோபிக்கு இது கஷ்ட காலம் சார்" என்றான். ஆசிரியரும் சிரிக்க, கோபி திடீரென விழித்துக் கொண்டான். செய்வதறியாது திகைத்தான்.

– என். ரம்யா, எட்டாம் வகுப்பு, ராஜ் மெட்ரிகுலேசன் பள்ளி, கூறைநாடு.



காப்பி

புவியியல் பாட வேளை. ஆசிரியர் முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். என் தோழியிடம், "காபி கிடைக்கும் இடங்களைக் கூறு" என்றார். "காபி கடைகளிலும் வீடுகளிலும் கிடைக்கும்" என்றாள். நாங்கள் சிரித்து விட்டோம். ஆசிரியர் கோபத்துடன் நின்றதைக் கவனித்த தோழி, "நான் நேற்று பள்ளிக்கூடம் வரலை" என்றாள். ஆசிரியரும் மன்னித்து உட்கார வைத்தார்.

– சு. சரண்யா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

ஆப்பர்ஸ்டார் எது?



16 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா






வாலில்லா குரங்குகள் பட்டணம் போகுது.
விசித்திரமான பெயராக இருக்கே!
அந்தத் தீவில் நள்ளிரவில் குரங்குகள் அட்டகாசம் அதிகம்.
அதனால் மக்கள் கப்பல், படகுகளில் கடலுக்கு வந்து தங்கி, விடிந்ததும் தீவுக்குப் போவார்கள்!
கப்பல் வாலில்லாக் குரங்குகள் பட்டணத்தை அடைந்தது.
சிந்துபாத்! இன்று இரவு இங்கு தங்கு. காலையில் வியாபாரிகள் வருவார்கள். அவர்களுடன் உன் ஊருக்குச் செல்லலாம்.
நன்றி நண்பர்களே! நீங்கள்...
நாங்கள் அருகில் உள்ள தீவுகளுக்குச் செல்ல வேண்டும்.
சிந்துபாத் ஒரு படகில் அமர்ந்திருந்தான்.
ஐயா! நீங்கள் புதியவரா?
ஆமாம்!
சிந்துபாத்தின் கதையைக் கேட்டான்.
இந்தப் பை நிறைய கூழாங் கற்கள் இருக்கு.
இது எதுக்கு?


செய்தால்?
இரவில் குரங்குகள் கோகோ மரத்தின் மீது அமரும். அவை என்ன செய்கின்றனவோ அதைச் செய்யுங்கள்!
உங்கள் ஊருக்குச் செல்ல வழி பிறக்கும்.
நள்ளிரவில் –
அதோ குரங்குகள் மரங்களில்...ம்... கல்லை எறியலாம்.
உடனே –
நிறைய கோகோ பழங்களை வீசி விட்டன. நல்ல வருமானம் தான்!
மறுநாள் வியாபாரிகளிடம் கோகோ பழங்களை விற்றான்.


அங்கிருந்து சில வியாபாரிகளுடன் அல்–உசிராத் தீவை அடைந்தான்.
இந்தத் தீவில் முத்து மலிவாகக் கிடைக்குமாம்! வாங்கணும்...
அங்கிருந்து பஸ்ராப் பட்டணம் சென்று பாக்தாத் நகரத்தை அடைந்தான்.
சிந்துபாத்! உயிரோடு இருக்கியா?
ஆமாம் ஐயா!
கப்பல் உடைந்து விட்டதாமே!
கப்பல் உடைந்தால் என்ன? அதைவிட அதிகமான பணம் கொண்டு வந்திருக்கேன்!
சிந்துபாத்தின் ஆறாவது சாகசப் பயணம் அடுத்த இதழில்...



9 மலைக்கோயிலுக்கு...

"நான் பொறக்கறதுக்கு முன்னே நடந்த சமாசாரம் இது" என்று தன் தந்தைக்குப் புதையல் கிடைத்த கதையைக் கூற லானான் டிங்கு.

"ஒரு சமயம் எங்க நயினா காட்டிலே போயிக்கிட்டிருந்தபோது பெருத்த மழை பெய்ய ஆரம்பிச்சுடுத்தாம். இடி மின்னல் இல்லாத பேய் மழை... எங்க நயினா ஒரு பெரிய மரத்தடியிலே ஒதுங்கி இருக்காரு. வெள்ளக் காடா மழைத் தண்ணி பெருக் கெடுத்து ஓடுதாம். அப்போ திடீர்னு அவர் நின்னுக்கிட்டிருந்த பூமி உள் வாங்கிடுச்சாம்! நல்லவேளையா - அந்தப் பெரிய மரத் தோட - வேர் குறுக்கும் நெடுக்குமா வலை பின்னினாப் போல பரவி இருந்ததாலே அவர் அந்தக் குழிக்குள்ளே விழலே. தட்டுத் தடுமாறி சமாளிச்சபடி, மழைநீர் அரித்த அந்தப் பெரிய குழியைப் பார்த்தப்போ அங்கே ஒரு வெங்கலப்பானை...!"

"புதையல் பானையா...!" என்றான் சத்யா வியப்போடு.

"ஆமா, அரண்மனைகளிலே, கோயில் களிலே இருக்குமே பூ வேலை செய்த பானை, அது போல - ஆனா பெரிசில்ல சின்னது. தூக்க வசதியா காது வளையம் வச்சது. அந்த வெங்கலப் பானையை இரா



தங்கச் சிலை!

வாண்டுமாமா

மத்துக் காவல் அம்மன் கோயிலிலே இப்பவும் பார்க்கலாம்!'' என்றான் டிங்கு.

"பானை நிறையப் பணமா?" என்றாள் நித்யா.

"இல்லே - அந்தக் காலத்து ராசாவோட பொற்காசுகளாம். நான் பார்க்கலே. நைனா சொன்னதுதான். மழை ஓயக் காத்திருந்து, ரொம்ப சிரமப்பட்டு, அந்தப் புதையல் பானையைத் தூக்க முடியாமத் தூக்கிக்கிட்டு கிராமத்துக்கு வந்தாராம். கூஜா திருகு மூடி போல அதன் வாயில் ஒரு மூடி இருந்திருக்கு. அதைத் திறந்தப்போ - பளபளன்னு, தங்கக் காசுங்க அதோட ஒரு தாமிரத்தகடு வேற...!''

சத்யாவும் நித்யாவும் தாங்க முடியாத வியப்புடன் டிங்கு வர்ணிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"அந்தப் புதையல் பணத்திலே கிராமத்துக்குப் பல நல்ல காரியங்களைச் செய்தாராம் எங்க நயினா. அந்த வெங்கலப் பானை அம்மன் கோயிலிலே பாலாபிஷேகப் பாத்திரமா இருக்கு..."

''அந்தத் தாமிரப்பட்டயம்?'' என்று கேட்டான் நித்யா.

"எங்க நயினா அதைப் பத்திரமா வச்சிருக்காரு. அதிலே ஏதோ படங்களும் எழுத்துக்களுமா இருக்கு. எங்க யாருக்கும் புரியலே. நேரமாயிட்டுது நீங்க தூங்குங்க. காலையிலே பேசிக்கலாம்" என்று கூறி விடை பெற்றான் டிங்கு.

காலையில் நித்யாவும் சத்யாவும் கண் விழிப்பதற்கு முன்பே, டிங்கு அவர்களை எழுப்ப வந்து விட்டான். கையில் பழங்களும் பாலும் இருந்தன. இரவு தன் தந்தையுடன் ஜெயராஜ் விஷயம் பற்றி விவாதித்ததாகவும் அவன் தன் எல்லைக்குள் வந்தால் அவனை வெட்டிப் போடுவேன் என்று தன் நயினா உறுதியளித்ததாகவும் கூறினான் டிங்கு.

''எங்கள் அப்பாவைக் கண்டுபிடித்

தாகணுமே டிங்கு. அதற்கு எந்த வழியுமில்லையா?" என்று கேட்டாள் நித்யா. அவள் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

"கவலைப்படாதே பாப்பா! அதற்கும் எங்க நயினா ஒரு ஏற்பாடு செய்திருக்கார். இன்று ஒரு தோணியிலே நாம் போய்க் குறிப்பிட்ட இடத்திலே இறங்கப் போகிறோம். அங்கேயிருந்து நான் உங்களை மலைக் கோயிலுக்குக் கூட்டிப் போறேன். நம் தேடலைத் தொடங்கலாம் - சந்தோஷம்தானே?" என்றான் முத்துப்பல் பளிச்சிட டிங்கு.

நித்யாவுக்கும் சத்யாவுக்கும் டிங்கு கூறியது ஆறுதலாக இருந்தது. மூவரும் துங்கபத்ரா நதிக்கரைக்குப் போனபோது அங்கே தோணி உருவாக்கும் பணி துரிதமாக நடந்து கொண்டிருந்தது. இளம் மரங்களால் இணைத்து வெகு லாகவமாக அந்தக் காட்டுவாசிகள் மிதவையைத் தயாரிக்கும் திறனைப் பார்த்தபடி பொழுதுபோனதே தெரியாமல் நித்யாவும் சத்யாவும் அமர்ந்திருந்தார்கள். மறுநாள் அதிகாலையில் தோணிப் பயணம் தொடங்குவதாக முடிவு செய்யப்பட்டது. நித்யா, சத்யா, டிங்கு தவிர கோல் போட ஒருவர் தோணியில் வருவதாகவும் தீர்மானமாயிற்று.

தோணிப் பயண எதிர்பார்ப்பும் அப்பாவைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் - குழந்தைகள் இருவருக்கும் இரவு தூக்கத்தைத் தரவில்லை. கிழக்கு வெளுப்பதற்காகக் காத்திருந்தார்கள். பழங்கள், சத்துமாவு இன்னும் என்னவெல்லாமோ உணவுப் பொருள்கள் அடங்கிய மூட்டையுடன் டிங்கு வந்தபோது - நித்யாவும் சத்யாவும் பயணப் படத் தயாராக இருந்தார்கள்.

இருள் விலகும் அதிகாலை வேளையில், தோணியில் அவர்களை ஏற்றி விடை கொடுத்த டிங்குவின் அப்பா - அவனிடம் ஏதோ கூறினார். "உங்களை ஜாக்கிரதையா பாத்துக்கும்படி எங்க நயினா கூறினார்" என்றான் டிங்கு. "உங்க நயினாவுக்கு எங்க நன்றியைச் சொல்லு டிங்கு!" என்றார்கள் குழந்தைகள்.

குளிர்ந்த காலை வேளையில் துங்கா நதியின் நீரைக் கிழித்துக்கொண்டு தோணி முன்னேறியது. இரு பக்கமும் பசேல் என்ற அடர்ந்த காடு... 'ஜில்'வென்று பறவைக் கூட்டம் காட்டுக்குள்ளிருந்து எழும்பி வானத்திலே வட்டமடித்து மீண்டும் கானகத்துள் மறைவது நித்யாவுக்கும் சத்யாவுக்கும் வேடிக்கையாக இருந்தது. "பறவைகளின் காலைவேளை உடற்பயிற்சி இப்படிப் பறப்பதுதான் போலிருக்கு!" என்றான் சத்யா. கானகத்தைப் பற்றியும் பறவைகள் மிருகங்களைப் பற்றியும் டிங்கு பல சுவாரசியமான விஷயங்களைக் கூறினான்.


"அரங்கநாதன் சாரோட நண்பர் - சீதாராம ரெட்டிகாரோட பண்ணையை நெருங்கிட்டமா சத்யா?" என்று கேட்டாள் நித்யா.

"தெரியல்லே நித்யா. அரங்கநாதன் சார் காட்டிய 'மேப்'பிலே இந்தப் பகுதியில் ஒரே காரைக் கட்டடம் சீதாராம ரெட்டி காரோடதுதான். அங்க போயிட்டா நம்மோட கஷ்டங்கள் ஒரு முடிவுக்கு வந்துடும்னு நினைக்கிறேன்" என்றான் சத்யா.

"ஆமா, காட்டில் அனுபவிச்ச சிரமங்களெல்லாம் போதும்!" - இது நித்யா.

"அரங்கநாதன் சார் நம்மை எதிர்பார்த்து அங்கே காத்திருப்பாரா?"

"இருப்பாருன்னுதான் நினைக்கிறேன். ரெட்டிகாருகிட்டே அவர்தானே நம்மைக் கூட்டிப் போகணும்...!" இவர்கள் உரையா



ஓவியப் போட்டி

கொஞ்சிப் பேசும் கிளிகள்தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. பஞ்ச வர்ணக் கிளியாகவோ, பச்சைக் கிளியாகவோ இருக்கலாம். ஆனால் வண்ணத்தில்தான் வரைந்து அனுப்ப வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முழு முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும்.
கடைசி தேதி: 20.3.2000



டலில் குறுக்கிட்டது டிங்குவின் குரல்.

"நம்ம கரை இறங்க வேண்டிய இடம் வந்தாச்சு!" தொலைவில் ஒரு வெள்ளைக் கட்டடம் தெரிந்தது. தோணியைக் கோல் நாட்டி நிறுத்தினார் அதைச் செலுத்தி வந்தவர். நித்யா – சத்யா, டிங்கு மூவரும் தோணியிலிருந்து ஆற்று நீரில் குதித்துக் கரையேறி, தோணியோட்டிக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள்.

"டிங்கு! உங்க நயினாகிட்டேருந்து அந்தத் தாமிரப் பத்திரத்தை வாங்கிக்கிட்டியா?" என்று பரபரப்போடு கேட்டான் நித்யா.

"மறப்பேனா? ராத்திரியே அதை வாங்கி இந்த மூங்கில் குழாய்க்குள்ளே சுருட்டி வைச்சுக்கிட்டேன்!" என்று ஒரு மூங்கில் குழாயைக் காட்டி, அதன் தக்கை மூடியைத் திறந்து தாமிரத் தகட்டுச் சுருளைக் காட்டினான். நித்யா பெருமூச்சு விட்டாள்.

"உன் நாணல் குழாய் ஆயுதமும் இருக்கு இல்லையா?" என்று கேட்டான் சத்யா.

"அது எப்போதுமே என்னோட இருக்கும்!" என்றான் டிங்கு சிரிப்புடன்.

நதிக்கரை மேடு ஏறி, கானகத்துக்குள் புகுந்து மலையடி வாரத்தை நோக்கி நடக்கலானார்கள். சிறிது தூரம் சென்றதும், இவர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் போல ஒரு மனிதன் – நகரவாசி எதிர்பட்டான். "வாங்க போகலாம்!" என்றும் வரவேற்றான். நித்யா சத்யாவின் முகம் வெளிறிப் போயிற்று. அது ஜெயராஜின் ஆள். சற்று தூரத்தில் ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்பு நிறக் கார் அதை ஊர்ஜிதம் செய்தது. மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தார்கள். அந்த மனிதன் காரின் கதவைத் திறந்து "ஏறிக் கொள்ளுங்கள்" என்றான். மூவரும் காரின் பின் சீட்டில் அமர்ந்து கொண்டதும் அவன் கதவைப் படீரென்று அடித்துச் சாத்தி விட்டு, ஏதோ பேர் சொல்லி அழைத்தான். புதரின் பின்னாலிருந்து மற்றொரு மனிதன் வெளிப்பட்டு டிரைவர் சீட்டில் அமர்ந்து கொள்ள, குழந்தைகளை வரவேற்றவன் அவனுக்குப் பக்கத்தில் உட்கார கார் கிளம்பியது.

நெஞ்சு 'திக் திக்' என்று தாளமிட வாய் உலர நித்யாவும் சத்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு டிங்குவிடம் கண் ஜாடையினால் தாங்கள் கடத்தப்பட்டுள்ளோம். பொறியில் சிக்கிக்கொண்டோம்! என்பதை உணர்த்தினான் சத்யா. டிங்கு அமைதியாக இருக்கும்படி அதே மௌன பாஷையில் கூறினான். வளைந்து செல்லும் காட்டுப் பாதையில் வெகு நேரம் பயணப்பட்டது கார். யாரும் பேசவே இல்லை. காட்டின் நெருக்கம் குறைந்து, புல் அடர்ந்த சமவெளியில் நாலைந்து பொதி கழுதைகள் நிறுத்தப் பட்டிருப்பதைக் கண்டார்கள். கார் நின்றது. கதவைத் திறந்தவன் "கிழே இறங்குங்க" என்றான் குழந்தைகளிடம். மூவரும் மௌனமாக காரிலிருந்து

வெளியே வந்தார்கள். துப்பாக்கி ஏந்திய ஒரு முரட்டு ஆள் குழந்தைகள் மூவரையும் அலாக்காகத் தூக்கி பொதி கழுதைகளின் மீது உட்கார வைத்தான். அவன் கைத் துப்பாக்கி குழந்தைகளைக் குறி பார்த்துக் கொண்டிருக்க "ம்... போகலாம்..." என்று உத்தரவிட்டான் காரில் வந்தவன். பொதி கழுதைகள் குழந்தைகளைச் சுமந்துகொண்டு மலைப் பகுதியில் மெள்ள ஏறலாயிற்று.

"நித்யா! என்ன நடக்கப் போறது?" என்றான் சத்யா உலர்ந்த குரலில்.

"நம்மை ஜெயராஜ் குண்டனிடம் அவன் ரகசிய இடத்துக்குக் கூட்டிப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே நம் அப்பாவையும் புரொபஸரையும் கூடச் சந்திக்கலாம்னு தோணுது" என்றாள் நித்யா. "பாவம் டிங்கு! நம்மோட மாட்டிக்கிட்டான். ஜெயராஜ் விவகாரத்துக்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லே"

"அப்படியெல்லாம் சொல்லாதே பாப்பா! எங்க நயினாதான் உங்களுக்குப் பாதுகாப்பா என்னை அனுப்பிச்சாரு. அவர் அனுப்பாட்டியும்கூட நான் உங்களைத் தனியா போக விட்டிருக்க மாட்டேன். எப்படியோ அந்த ஜெயராஜ் கெட்ட ஆளு. அவனை ஒரு கை பாத்துற வேண்டியதுதான்!" என்றான் டிங்கு வீராப்போடு.

பாதை வர வர உயர்ந்து கொண்டிருந்தது. கழுதைகள் நிதானமாக முன்னேறிக்கொண்டிருந்தன. "சத்யா!" ரகசியக் குரலில் கூப்பிட்டாள் நித்யா. "முகத்தில் கலவரத்தைக் காட்டாதே. நாம் பயப்படுவதை அவன் அறியக் கூடாது. இயல்பாக இரு" என்றாள். சிறிது நேரத்தில் பொதி கழுதைகள் நிறுத்தப்பட்டு, குழந்தைகள் கீழே இறக்கப்பட்டனர். தொலைவில் சமவெளியில் கூடாரங்கள் தெரிந்தன. அடியாட்கள் குழந்தைகளிடம், தங்களைப் பின் தொடருமாறு கூறி முன்னால் செல்ல, குழந்தைகளுக்குப் பின்னால் ஒருவன் துப்பாக்கி ஏந்தி வர கூடாரங்களை நோக்கிச் சென்றனர்.

சமையலின் புகையும் வாசனையும் – ஆனால் ஆட்கள் யாரையும் காணவில்லை – கள்ளியம் பெட்டிகள் ஒரு பக்கம் அடுக்கப்பட்டிருந்தன. தட்டு முட்டுச் சாமான்கள் வேறு. தொலைவில் மலையடி வாரப் பாறையில் பழங்காலச் சிற்பங்களைப் போலப் பல உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள் நித்யாவும் சத்யாவும். "மலைக் கோயிலுக்குப் போகும் வழி போலிருக்கு" என்றான் சத்யா கிசுகிசுப்பான குரலில் நித்யாவிடம். டிங்குவும் அதை ஆமோதித்தான் தலையை ஆட்டி.

"மலைக் கோயிலைக் கண்டு பிடிச்சுட்டான் போலிருக்கு ஜெயராஜ். ஆனா புதையலைக் கண்டுபிடிக்க முடியலே" என்றான் சத்யா.

"அதுக்குத்தான் நம் அப்பாவையும் புரொபஸர் புண்ணியகோடியையும் 'கிட்நாப்' பண்ணிட்டு வந்திருக்கான்" என்றாள் நித்யா, பாறைச் சிற்பங்களை ஆராய்ந்தபடி.


"அது சரி நித்யா! நம்ம டாடி எங்கே?" என்று கேட்டான் சத்யா.

அப்போது அவர்களை முன்னேறிப் போகுமாறு கூறியபடி தள்ளினான் துப்பாக்கி ஏந்தியவன் – இரு மலை பாறைகளுக்கிடையே பெரும் பிளவை நோக்கி. அந்த இருண்ட பிளவு வழியில் சிறிது தூரம் சென்றதும் பளீர் என்ற வெளிச்சமும் இரண்டு மூன்று பெரிய கூடாரங்களும் ஒரு வெட்ட வெளியில் தெரிந்தன. ஒரு கூடாரத்திலிருந்து ஜெயராஜ் வெளிப்பட்டான். துப்பாக்கி ஏந்திக் குழந்தைகளைக் கூட்டி வந்தவன் அவனிடம் போய் ஏதோ கூற, ஜெயராஜ் மௌனமாக அதைக் கேட்டுக்கொண்டான். அப்போது –

"சத்யா! அதோ அந்தக் கூடாரத்திலே பார் – நம்ம டாடி!" என்றாள் நித்யா மூச்சுத் திணறியபடி – அவ்வளவு மகிழ்ச்சி அவளுக்கு. சத்யாவுக்கும்தான்!

அந்தக் கூடாரத்திலிருந்து அவர்களுடைய தந்தை மோகனும் புரொபஸர் புண்ணியகோடியும் வெளியில் வந்தனர்.

(தொடரும்)



"பசுபதி என்ன பண்றார்?"
"பால் டெப்போ வச்சு நடத்துறார்!"
— புலவர் கணேசன்






வாழை!

ஆண்டு முழுவதும் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் ஒரே பழம் - வாழைப் பழம்தான். உடல் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாச் சத்துப் பொருள்களும் இதில் நிரம்பியிருக்கின்றன.

மற்ற பழங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு வைட்டமின்கள் தான் இருக்கும். வாழைப் பழத்திலோ ஏ,பி,சி, வைட்டமின்களும் புரோட்டின், கால்சியம் உலோகச் சத்துகள் எல்லாமே நிறைய இருக்கின்றன. சர்க்கரைச் சத்தும் இருக்கிறது. எல்லா வைட்டமின்களும் இருப்பதால் இதைச் 'சமதாது உணவு' என்கிறார்கள். அஜீரணத்துக்கும் அருமருந்து. சுலபமாகவும் எல்லோராலும் அதை வாங்கவும் முடியும். முக்கனிகளுள் ஒன்று.

கி.மு. 327 லேயே வாழை பயிரிடுவது சிந்து சமவெளி மக்களின் பயிர்த் தொழிலில் ஒன்றாக இருந்திருக்கிறது. அதன்பின் அராபியர்கள் தங்கள் ஊர்களுக்கும் எகிப்துக்கும் கொண்டு சென்றார்கள். ஆனாலும் இந்தியாவிலேதான் வாழைப் பழம் பயிரிடுவது அதிகம். வாழையின் தாயகம் இந்தியாதான். மலேசியா, இந்தோனேசியா, சீனா, ஜப்பான், ஆப்பிரிக்கா, மேற்கிந்தியத்



தீவுகள், பிரேசில் போன்ற இடங்களிலும் வாழை அதிகம் பயிராகிறது.

மிகுந்த வெப்பமும் நீரும் உள்ள இடங்களில் வாழை செழித்து வளரும். இந்தியாவில் வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸா, பீகார், மும்பை பகுதிகளில் விவசாயிகள் நிறைய வாழையைப் பயிரிடுகிறார்கள். தமிழ்நாடுதான் வாழையைப் பயிரிடுவதில் முதலிடம் வகிக்கிறது. வாழைப்பழம் அதிகமாக உண்பவர்களும் இங்கேதான் அதிகம்.

வாழை பயிரிடுவது லாபகரமாகவும் இருக்கிறது. அதற்காக அதிகம் சிரமப்பட வேண்டியதும் இல்லை. பராமரிப்பது சுலபம்.

பூமியில் விளையும் பொருட்களின் விளைச்சலை கலோரி கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் வாழையே அதிக கலோரிகளைத் தருகிறது. ஒரு ஏக்கரில் பயிராகும் வாழையில் மட்டும் 50 லட்சம் கலோரிகளுக்கு மேல் இருக்கிறது.


வாழையில் மொந்தன், ரஸ்தாளி, இருவாட்சி, நேந்திரன், பேயன், செவ்வாழை, பூவன், மலைவாழை, பச்சை, நாடன் போன்ற பல வகைகள் உண்டு. வாழையில் மட்டும் அதன் எல்லாப் பகுதிகளும் நமக்குப் பயன்படுகின்றன. பழத்தை உண்ணலாம். அதன் காய், பூ மற்றும் தண்டும் கூட உணவுப் பொருளாகப் பயன்படுகின்றது. வாழைப்பட்டையிலிருந்து நார் எடுக்கப்படுகிறது.

கொங்கு நாட்டில் ரஸ்தாளி பார்க்கவே அழகாக இருக்கும். இரண்டு பழம் சாப்பிட்டாலே பசி பறந்து விடும். கேரளத்து நேந்திரன் வாழையில் அதன் தோலும் கறி சமைக்கப் பயன்படுகிறது. ஆனால் மொந்தன் வாழையே சமையலுக்குச் சிறந்தது. அதற்கு ஈடே கிடையாது. திண்டுக்கல் பக்கத்து சிறுமலைப் பழமும் மிகுந்த ருசியுடன் மருத்துவக் குணமும் உடையது.

வாழை உண்மையில் மரம் அல்ல. அடி மரம் போல் தோன்றுவது அதன் இலைப் பட்டைகளே. இப் பட்டைகள் ஒன்றின் மேல் ஒன்று அமைந்து மரத் தண்டு போலத் தோற்றம் அளிக்கிறது. இத் தண்டு போலித் தண்டு எனப்படுகிறது. வாழையின் உண்மையான தண்டு தரைக்குக் கீழ் உள்ளது. பூங்கொத்தும் தரைகீழ் தண்டிலிருந்தே வளர்கிறது. இது போலித் தண்டின் நடுவில் வளர்ந்து வந்து தண்டின் உச்சியில் வெளிவருகிறது.

வாழையில் விதைகள் உண்டாவதில்லை. மரத்தின் அடியிலுள்ள கிழங்கிலிருந்து சிறு கன்றுகள் வளரும். ஒரு முறையே பூக்கும்; காய்க்கும். தினம் தோறும் வாழைப்பழம் சாப்பிடுவது நல்லது. மங்கள விழாக்களில் வாழை இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

— **தேனிமுருகேசன்**



பன்றி வரையுங்கள்!


கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எண்ணும் எழுத்தும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் பன்றி ரெடி.

தலை : R9→ P11→ P14→ Q15→ T15→ U14→U11→ S9→R9

இடது காது : R9→R8→O7→O10→P11

வலது காது : U11→V12→V8→T8→S9

உடல் : O9→ I9→ G11→ G14→ I16→ I17→J17→J16→K16→L17→ M17 →L16→ Q16→ Q17→ R17 →R16→ S16→ S17→ T17 →T15



நன்றி: லிட்டில் ஆர்க்

Rs. 6/-

MARCH
2000

GOKULAM

The monthly magazine for children

Angels who saved lives — True story



THE ROUGH TAILS

— In the wild

The missing slide - Experience

- why do we need English? viewpoint

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

சூரியனின் எடையை எப்படி கணிக்கிறார்கள்?


ஏன், எப்படி? தொகுப்பு: க. சீனிவாசன், எஸ். ஜனார்த்தனன், இரா. கேசவமூர்த்தி. பக். 124. ரூ. 32/- அறிவியல் வெளியீடு, E57-A, 7வது மேற்குத் தெரு, காமராசர் நகர், திருவான்மியூர், சென்னை – 41.

ஆயிஷா என்ற பள்ளிச் சிறுமி அறிவியல் உந்துதலால் எழுப்பிய வினாக்கள் அவைகளுக்கான பதில்கள் இந்த நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எல்லாமே அறிவியல் உணர்வுக்குத் தீனி போடுபவை. உதாரணம். மின் விசிறியின் பின்பக்கம் காற்று வருவதில்லையே ஏன்? சூரியனின் எடையை எப்படி கணிக்கிறார்கள்? அறிவியல் உலகுக்கு அழைத்துச் செல்ல உதவும் சக்திமிக்க திறவுகோல். அயல்நாட்டுப் புத்தகங்களுக்கு ஈடான தரமான தயாரிப்பு.

51 ஆன்மீகக் குட்டிக் கதைகள். ஜானகி மணாளன். பக். 96. ரூ. 18/- திருவரசு புத்தக நிலையம், 13, தீன தயாளன் தெரு, தி. நகர், சென்னை – 17.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு நீதியை அழுத்தமாகப் புரிய வைக்கும்படி 51 குட்டிக் கதைகள். இதிகாச புராணங்களில் இருந்து தரப்பட்டுள்ளன. படங்களே இல்லாததுதான் குறை. எல்லோருக்கும் பயன்படும்.

உங்கள் நூலகம்



சிறுவர்க்கான கல்வி வள்ளல் காமராசர் கதை, அரிமதி தென்னகன். பக். 168. ரூ. 37/- முத்துப் பதிப்பகம், 7, வில்லியம் வளாகம், 2வது தெரு, கன்னியாகுளம் வீதி, விழுப்புரம் – 605 602.

பள்ளிக் கல்வியை இலவசமாக்கி, பட்டிதொட்டிகளெல்லாம் பள்ளிகளைத் தொடங்கி கிராமக் குழந்தைகளின் கல்விக் கண்களைத் திறந்த காமராசரின் வாழ்க்கை வரலாறு. தெள்ளிய நடைக்காக ஒருமுறை, சுவை குன்றாமல் அளித்திருப்பதற்கு ஒருமுறை என்று பலமுறை படிக்க வைக்கிறது.

ஆல்பிரட் நோபல், இ.சு. கவியபெருமாள். பக். 76. ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.

டைனமைட் வெடி மருந்தைக் கண்டுபிடித்ததோடு, நோபல் பரிசு நிறுவியவருமான விந்தை அறிஞர் ஆல்பர்ட் நோபலின் சுவையான வாழ்க்கை வரலாற்று நூல். முழுப் பக்கப் படங்கள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

காந்தி பிறந்த ஊரில் கண்டதும் கேட்டதும், பி.வி.கிரி, பக். 96. ரூ. 25/- திருமலைப் பதிப்பகம், பிளாக் எண். 385, அறிஞர் அண்ணா நகர் (கிழக்கு), சென்னை – 102.

காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தின் சிறப்புகளைப் பல கோணங்களில் காண்கிறோம். காந்தியடிகளுடன் தொடர்புடைய தகவல்கள் பலவற்றையும் சுவையாகத் தந்துள்ளார் ஆசிரியர். படங்கள் சிறப்பூட்டுகின்றன.

— ரே.

தினமும் மோகன் கொண்டு வந்து நண்பர்களுக்குத் தரும் மாங்காய்க்காக ஏங்குபவர்களில் பாபுவும் ஒருவன்.

மாடசாமி தோப்பு மாங்காய் என்றாலே அந்த ஏரியாவே நாவில் நீர்சொட்ட ஆவலாய் எதிர்பார்க்கும். அவ்வளவு இனிப்பு.

கொத்துக் கொத்தாய்த் தொங்கும் காய்களைக் கல் விட்டெறிந்து கொண்டு செல்லவும் முடியாது. காரணம், சுற்றிலும் போடப்பட்டுள்ள முள்வேலி. வேலிக்குள் தான் விழுகின்ற காய் கிடக்கும். எடுக்க முடியாது.

வேலியோடு மட்டுமல்லாது ஒரு முரட்டுக் காவலாளியையும் போட்டிருந்தார் மாடசாமி. காவல்காரனை மீறித் தோப்புக்குள் யாருமே நுழைய முடியாது.

அதனாலேயே அந்த வழி போவோர் நிலவை அண்ணாந்து பார்த்து ரசிப்பது போல் ரசித்து விட்டு கற்பனையிலேயே காயை ருசித்து விட்டுப் போவார்கள்.

அப்படியிருந்தும்... ஆறாம் வகுப்பில் படிக்கும் மோகன் மட்டும் எப்படி தினமும் ஒன்றிரண்டு மாங்காயோடு பள்ளிக்கு வருகிறான் என்பது மற்ற மாணவர்களுக்குப் புதிராக இருக்கும்.

தினமும் மோகன் தான் கொண்டு வரும் மாங்காயைப் பத்தைகளாகக் கீறி நண்பர்களுக்குக் கொடுப்பான். அதற்குப் பதிலாகக் காசு வாங்கிக் கொள்வான்.

பாபுவிடம் காசு இருப்பதில்லை. ஆனால், ஆசை மட்டும் விட்ட பாடில்லை.

மற்ற மாணவர்கள் சாப்பிடும் போது பாபுவுக்கு நாவில் நீர் ஊறும். எப்படியாவது நாமும் ஒருநாள் மாங்காயைப் பறித்து இதே போல் தின்று காட்ட வேண்டும் என்று மனத்திற்குள் முடிவெடுத்தான்.

அதற்கு முக்கிய காரணமே காசில்லாமல் மாங்காய் கேட்கும்போதெல்லாம் மோகன் பாபுவை அவமானப்படுத்தியது தான்.

எப்படியாவது மோகனிடம் பேசி நண்பனாகி அவன் எந்த வழியில் மாங்காயைக் கொண்டு வருகிறான் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான்.

பாபுவின் விருப்பப்படியே மோகன் கொஞ்சம் கொஞ்சமாக பாபுவிடம் நெருக்கமானான்.

இருவரும் சேர்ந்து மாங்காய் திருடிக் கொண்டு வந்தால் நிறைய காய்கள் கொண்டு வரலாம்; நிறைய காசுக்கு விற்கலாம்; கிடைப்பதை ஆளுக்குப் பாதி பிரித்துக் கொள்ளலாம் என்று மோகனும் பாபுவுக்கு ஆசை காட்டினான்.

பாபு, மோகனுடன் சேர்ந்து மாங்காய் திருட முடிவெடுத்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; பிற்பகல் நேரம்.

மோகன் முன்பே சொல்லியிருந்த இடத்துக்குப் பாபு வந்து சேர்ந்தான்.

அவனது தோள் மீது கை போட்ட படியே மோகன் பாபுவை ரகசியமாக தான் வழக்கமாக உள்ளே நுழையும் இடத்துக்கு அழைத்துச் சென்றான்.



தோப்புக்கு வடக்குப் பக்கமாக இருந்தது அந்த வழி. மிகவும் அடர்த்தியான முள் வேலி. உள்ளே இரண்டு பேர் ஒளிந்திருந்தாலும் வெளியே தெரியாது.

அடிப்பக்கம் இருந்த முட்களையெல்லாம் நீக்கி ஏற்கெனவே, சரிசெய்து வழியாக்கி இருந்தான் மோகன். உட்கார்ந்த படியே மெல்ல நகர்ந்து உள்ளே போகலாம்.

அருமையான திருட்டு வழி.

மோகன் ஓசைப்படாமல் குனிந்து மெல்ல மெல்ல நகர்ந்து போனான். பாபு அவனைப் பின் தொடர்ந்தான்.

வழியைச் சரியாகப் பார்த்துக்

எஸ். சங்கர்

கொண்டான் பாபு. அப்போதுதானே அவன் தனியாக அடுத்த முறை வர முடியும்!

மோகன் வேலியைக் கடந்து விட்டான். பாபு நிமிரும் நேரம் அவனுடைய முதுகில் ஏதோ குத்தியது. 'ஆ' என்ற அலறல் அவனது தொண்டையிலேயே அடங்கிப் போனது.

சட்டை கிழிந்து முதுகிலே முள்ளொன்று கிறிக் காயம் பட்டு ரத்தம் வருவதை அவனால் உணர முடிந்தது. ஆனால் வெளிக்காட்ட முடியவில்லை.

இனிப்பு மாங்காய்!

பேசாமல் பின்தொடருமாறு மோகன் சைகை காட்டினான்.

மோகன் பாபுவை அருகில் இழுத்துக் காதருகில் இதோ இந்த மரம்தான் என்று காட்டினான். நிமிர்ந்து பார்த்த பாபு கொத்துக் கொத்தாய்த் தொங்கிக் கொண்டிருந்த காய்களைப் பார்த்து 'ஆ'வென வாய்பிளந்தான்.

அவனது வாயைக் கையால் மூடிய பாபு, "டேய், அதோ பார்" என்று வேறு திசையில் கையை நீட்டிக் காட்டினான்.

அங்கே... சற்றுத் தொலைவில்... ஒரு கயிற்றுக் கட்டிலில் காவலாளி தூங்கிக் கொண்டிருந்தான். பார்த்தவுடன் பாபு அதிர்ந்து போனான். மோகனைப் பார்த்தான்.



மோகனோ பதற்றமே படாமல், "பயப்படாதே இதோ பார்" என்று சொல்லியபடியே ஏற்கெனவே கொத்தாய் எடுத்து வைத்திருந்த முட்களைக் கொடி போல் அள்ளிப் போட்டு விட்டு, "காவலாளி வந்தால் இந்த வழியாகத்தான் வருவான்; இது கடுமையான விஷ முள்! இதிலே காலை வைத்தால் அவன் கதி அவ்வளவுதான். அவன் நெருங்கி வருவதற்குள் நாம் வந்த வழியே ஓடி விடலாம், பயப்படாதே!" என்றான்.

பாபுவுக்கும் அது சரியாகவே பட்டது.

"எனக்குத்தான் காவல்காரன் எப்படி வருவான் என்பது தெரியும். அதனால் நான் கீழே நிற்கிறேன்; நீ மரத்து மேலே ஏறிக் காய்களைப் பறித்து இந்தப் பையில் போட்டு எடுத்துக் கொண்டு பொறு

மையாக இறங்கி வந்து விடு. புரிந்ததா?" என்றபடியே தன் கால் சட்டைப் பையில் இருந்த துணிப்பை ஒன்றைக் கொடுத்து விட்டு பாபுவை மரத்தின் மேல் தூக்கி விட்டான் மோகன்.

காந்தத்தைக் கண்ட இரும்பு போல் பாபு வேக வேகமாக மேலே ஏறிக் காய்களை நெருங்கினான்.

தன் கைக்கு எட்டியவரை இருந்த காய்களைப் பறித்துப் பையில் போட்டுக் கொண்டான்.

பை நிரம்பியவுடன் சுமை தாங்கவில்லை.

இறங்க முயன்றான்.

முடியவில்லை.

கீழே பார்த்தான். மோகன் சீக்கிரம் வரும்படி சைகை காட்டினான்.

அவனைப் பார்த்தபடியே கிளை யென்று நினைத்துக் காலை வைத்து வழுக்கி விடவே, பையை நழுவ விட்டு விட்டான்.

'தொப் தொப்'பென்று ஒவ்வொரு காயாகக் கீழே விழுந்தது. ஒன்று மோகன் தலையில்!

'அம்மா' என்று அலறினான்.

காவல்காரன் எழுந்து கொண்டான்.

அவ்வளவுதான். மோகன் சிட்டாகப் பறந்து விட்டான்.

வேகவேகமாகக் கீழே இறங்கிய பாபு தப்பிக்க வழி தேடித் திசை தெரியாமல் ஓட முயன்றான்.

அப்போதுதான் அது நடந்தது.

மோகன் ஏற்பாடு செய்திருந்தபடியே விஷமுள் வேலை செய்தது. ஆனால், காவல்காரனின் காலில் அல்ல; பாபுவின் காலில்தான்.

பாபு அலறி விட்டான்.

கீழே விழுந்தவனால் எழுந்திருக்க முடியவில்லை.

அதற்குள்... காவல்காரன் பாபுவை நெருங்கி விட்டான்.

பாபுவின் தோளில் கை வைத்து அழுத்தி, "தம்பி, பயப்படாதே. நான் ஒண்ணும் செய்ய மாட்டேன். இது விஷமுள். பொறுமையாக இரு. எடுத்து விடறேன்" என்றான்.

பாபு மௌனமானான்.

சொன்னபடியே செய்தான் காவல்காரன்.

முள்ளிலிருந்து விடுபட்ட பாபுவை மெதுவாகத் தூக்கிப் புல் தரையில் உட்கார வைத்த காவல்காரன் கீழே விழுந்து கிடந்த மாங்காய்களில் நான்கை எடுத்து அவனிடம் கொடுத்து,

"தம்பி, நீ திருட்டுப் புத்தி உள்ளவன் கிடையாது என்பது உன்னைப் பார்க்கும் போதே தெரியுது. உன் கூட வந்தவன் உன்னை விட்டுட்டு ஓடி விட்டான். உன்னை ஆபத்தில் விட்டு விட்டு ஓடக் கூடிய அவனை நம்பி வந்தாயே அதனால தான் உனக்கு இந்தத் தண்டனை. விளையாட்டா திருட ஆரம்பிச்சா அதுவே பழக்கமாயிடும். இனிமேல் எப்பவுமே எதையுமே திருடாதே. அதை விட தீய நண்பர்களோடு சேராதே! மாடசாமி ஐயா வர்ற நேரம். நேர் வழியாவே வெளியே போய்விடு" என்றான்.

காவல்காரன் கொடுத்த மாங்காய்களோடு வெளியே வந்த பாபு தோப்பின் வெளிப்பகுதியில் ஒளிந்திருந்த மோகனைக் கண்டான்.

காலில் முள் குத்திய இடமெல்லாம் வலி தாங்க முடியாமல் வேதனைப்பட்டான் பாபு.

மோகன் மெல்ல அவனிடம் வந்து தோளைத் தொட்டு, "என்னடா நடந்தது?" என்று கேட்டான்.


பதிலேதும் பேசாத பாபு கையிலிருந்த மாங்காய்களை மோகனிடம் கொடுத்து விட்டு வேகமாகத் தன் வீடு நோக்கி நடந்தான்.



''வைட்டமின் 'ஏ' எதிலெல்லாம் இருக்கிறது தெரியுமா?''

''வேலு மெடிகல்ஸ், ராஜ் பார்மஸி இங்கெல்லாம் இருக்கு!''

— பாலு



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

தீனி வேண்டும்


எங்கள் வீட்டில் மாடு வளர்த்து வருகிறோம். ஒருநாள் அப்பா கடைக்குக் கிளம்பினார். மாட்டிற்குத் தண்ணீர் ஊற்றி விட்டு வந்த என் தங்கை, "அப்பா தீனி வாங்கிட்டு வாங்க" என்றாள். அப்பாவும் தலையாட்டி விட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்த அப்பாவிடம் பையை ஆசையுடன் வாங்கினாள் தங்கை. பிரித்துப் பார்த்தவள், "என்னப்பா புண்ணாக்கு மட்டும் வாங்கியிருக்கீங்க?" என்றாள் ஏமாற்றத்துடன். "மாட்டுக்குத்தானே தீனி கேட்டே. அதான் புண்ணாக்கு வாங்கினேன்" என்றார் அப்பா. "அப்பா நான் கேட்டது எனக்கு" என்றாள் கோபத்துடன். நானும் நண்பனும் அடக்க முடியாமல் சிரித்து விட்டோம்.




– ஆர். உதயகுமார்,
பட்டீஸ்வரம்.

பிடித்துக் கொண்டு...

நான் அம்மா, அப்பா, தம்பி எல்லோரும் திருவிழாவிற்குச் சென்றோம். அப்பா வீட்டிலிருந்து கிளம்பும்போதே "கண்டதையும் கேட்டு அடம்பிடிக்கக் கூடாது" என்று கூறினார் தம்பியிடம். திருவிழாவில் ஈ மொய்க்கும் பஞ்சு மிட்டாயைக் கேட்டு அடம்பிடித்தான் தம்பி. அப்பா வாங்கித் தர மறுத்து விட்டார். யாரிடமும் பேசாமல் தனியாக நடந்தான். அப்பா கையைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னார். அவன் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. அப்பா தம்பியிடம், "நான் ஒன்றைப் பிடித்துக் கொண்டு வரச் சென்னால் நீ ஒன்றைப் பிடித்துக் கொண்டு வர்றியே" என்றார். "நான்தான் ஒண்ணுமே பிடிக்கலையே" என்றான் கோபத்துடன் தம்பி. "பிடிவாதம் பிடித்துக் கொண்டு வர்றியே" என அப்பா கூறவும் தம்பி உட்பட அனைவரும் சிரித்தோம்.




–சி. ராஜசேகரன்,
ராஜபாளையம்.





ரமேஷ் எங்கே?

நாங்கள் டிவியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது என் தாத்தாவின் நண்பர் வந்தார். சிறிது நேரம் கழித்து, "ரமேஷ் இல்லையா?" என்று கேட்டார். நான், "இந்த மாட்ச்சில் ரமேஷ் கிடையாது" என்றேன். அவர் திருதிருவென விழித்தார். சிறிது நேரம் கழித்து, "ரமேஷ் எங்கேடா?" என்றார். "இப்பத்தானே தாத்தா சொன்னேன். இதுல கிடை




யாது" என்றேன். அவர் அமைதியாக உட்கார்ந்திருந்தார். சிறிது நேரம் யோசித்தேன். பிறகுதான் புரிந்தது. ஒருவேளை எங்கள் மாமா ரமேஷைக் கேட்கிறாரோ என்று. உடனே, "தாத்தா நம்ம ரமேஷ் மாமாவை கேட்டீங்களா?" என்றேன். "அப்பாடா! இப்பவாவது புரிஞ்சுதே! எனக்கு கிரிக்கெட் பற்றி ஒண்ணும் தெரியாது" என்றார். நான் மன்னிப்புக் கேட்டேன்.

வெங்கட்டு வரவில்லையா?

– அ. கணேஷ் சிவா, விருதுநகர்.

கறை!

எங்கள் அப்பா தினமும் வெள்ளை உடையில்தான் அலுவலகம் செல்வார். அன்று மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார். அப்பாவின் சட்டையில் கிரீஸ் கறை ஒட்டி




யிருந்தது. அதைப் பார்த்த அம்மா, "புதுச் சட்டை. இப்படி கறையாகி விட்டதே. எலுமிச்சம் பழம் தேய்த்தால் போகுமா?" என்றார் வருத்தத்துடன். "மண்ணெண்ணெய் போட்டால் போகும்" என்றேன் நான். படித்துக் கொண்டிருந்த என் குட்டித் தங்கை, "அப்பா! இது நல்ல ரப்பர். இதை வச்சு கறையை அழிச்சிடலாம்" என்றாளே பார்க்கலாம்!

– வ. கமலாஷினி, ஏழாம் வகுப்பு, புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.

ஓடுமா?

அன்று எனக்கு விடுமுறை. ரைஸ் மில்லில் மாவரைத்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தேன். எதிரில் எனக்குத் தெரிந்த பையன் சைக்கிளில் பாத்திரத்தை வைத்துக் கொண்டு வேக




மாக வந்தான். என்னைப் பார்த்ததும் "அண்ணே, ரைஸ் மில் ஓடுதா?" என்றான். "ரைஸ் மில் ஓடாது. நீ போய் இவ்வளவு வேகமா பிடிக்கணும்னு ஒண்ணும் இல்லை. மிஷின் ஓடிட்டு இருக்கு. மெதுவா போ" என்றேன். "என் அவசரம் புரியாமல் இப்படி கிண்டல் பண்றியே" என்றபடி மீண்டும் வேகமாகக் கிளம்பினான் அவன்.

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

எங்கள் ஊரில் நடந்தது!


மரம்
பார் பிரபு, எனக்காக மாடியில் புதிதாக அப்பா கட்டித் தந்த ரூம்.
என்னடா முரளி, இவ்வளவு அழகாக் கட்டிட்டு— இந்த மரம் மறைக்குதே! இதை வெட்டிட்டா என்ன.. எங்க வீடு பளிச்சென்று தெரியும். மரம் கிடையாது.
ஆமா! எனக்கும் மரம் பிடிக்கலை!
கதை: க.ராமச்சந்திரன்
அப்பா, பிரபு சொல்றமாதிரி அந்த மரத்தை வெட்டிடலாமா?
மரத்தின் அருமை தெரிஞ்சு எல்லாரும் வளர்க்கிறாங்க.— எப்படிடா அதை வெட்டச் சொல்றே?
வகுப்பில் -
இன்று லாஸ்ட் ரெண்டு பீரியட் எல்லாரும் பள்ளி மைதானத்துக்கு வந்துடணும். மரம் வளர்ப்பதின் அவசியத்தைப் பற்றி ஒரு பிரமுகர் வந்து பேசுவார். இது மரம் வளர்ப்பு வாரம்—தெரியுமில்லை?


கூட்டம் முடிந்து வந்ததும்
இந்த வேப்பங் கன்று! எவ்வளவு?
வேம்பு
அஞ்சு ரூபாதான்!
முரளி எனக்கும் ஒண்ணு எடுடா... எங்க வீட்டு முன்னால மரமே இல்ல!


அன்று மாலை
என்னடா முரளி காலைல மரத்தை வெட்டணும்னு சொன்னே. இப்போ புதுசா ஒரு மரம் நடறே?
ஸாரிப்பா. மரத்தை வெட்ட வேண்டாம். இந்த மரத்தை நானே வளர்க்கப் போறேன்.

நீங்கள் இப்படியானா

மாலதி

எக்ஞனும் ஏமாளனும் சகோதரர்கள். எக்ஞன் மகா கெட்டிக்காரன். ஏமாளன் அப்பாவி. பெற்றோர் இறந்ததும் பாகப்பிரிவினை செய்து கொண்டனர்.

நிலம் மட்டும் பொதுவில் இருந்தது. ஏமாளன் மாங்கு மாங்கென்று உழைப்பான். ஆதலால் நிலப் பிரிவினை இப்போது வேண்டாம் என்று தள்ளிப் போட்டான் எக்ஞன்.

"தம்பி! இந்தத் தடவை நிலத்தின் மேல் விளைவதெல்லாம் எனக்கு. கீழ் விளைவதெல்லாம் நீ எடுத்துக் கொள்" என்றான் எக்ஞன்.

விளைந்த நெல்லையும், வைக்கோலையும் தமையன் எடுத்துப் போக தம்பி வெறுங்கையோடு வீடு திரும்பினான்.

அடுத்த முறை தம்பியின் விருப்பப்படி நிலத்துக்குக் கீழே விளைவதை எல்லாம் தான் எடுத்துக் கொள்வதாக வாக்களித்தான் அண்ணன்.

கிழங்குகளும் வேர்க்கடலை மூட்டைகளும் எக்ஞன் வீடு செல்ல மறுபடி ஏமாந்தான் ஏமாளன்.

"நீ வேத சாஸ்திரங்களைப் படித்தால் யாக, ஹோமங்கள், கல்யாணங்கள் செய்து நிறைய சம்பாதிக்கலாம்" என்று ஒரு பண்டிதர் அவனுக்கு சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுத்தார்.

ஒருநாள் யாகத்துக்கு குருவும் சீடனும் மாட்டு வண்டியில் சென்றனர்.

"மனதை ஒருநிலைப்படுத்தி மந்திரம் ஜபித்துக் கொண்டு வா. பராக்கு பார்க்காதே. காக்கைகள் சண்டை ஒரு வேடிக்கையா? மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தினால் மந்திரங்கள் பலிக்காது. மனப்பாடமும் ஆகாது" என்றார் குருநாதர்.

ஏமாளன் உரக்க மந்திரம் சொல்லிக் கொண்டு வந்தான். ஹோமத்துக்கான சமித்துகளைக் (அரச மரக் குச்சிகள்) கொண்டு வரும் பொறுப்பு பண்டிதரிடம் விடப்பட்டிருந்தது. அந்த சமித்துகள் கொண்ட முடிச்சு வழியில் விழுந்தது.

யாகசாலை சென்ற பண்டிதர் யாகத்தைத் தொடங்கினார். சமித்துக்களைப் போடும் நேரம் வந்ததும் சீடனை அழைத்து, "சமித்து முடிப்பை அவிழ்த்து சமித்துகளைப் பிரி" என்றார்.

"அதான் சமித்து மூட்டை வழியிலே விழுந்து விட்டதே!" என்றான் ஏமாளன்.

எல்லா தீட்சிதர்களும் திடுக்கிட்டனர். பண்டிதருக்கும் 'திக்'கென்றிருந்தது.

"என்னடா சொல்கிறாய்? சரியான அசமஞ்சம். விழுந்தவுடனே சொல்லித் தொலைப்பதற்கென்ன?" என்று பதறினார்.

"நல்லா சொல்வீங்களே! நீங்கதானே மந்திரம் ஜபிக்கும் போது நடுவிலே பேசக் கூடாது என்றீர்கள்" என்றான் ஏமாளன்.

"கர்மம், கர்மம்" என்று தலையில் அடித்துக் கொண்ட பண்டிதர் ஒரு ஆளை ஏமாளனுடன் அனுப்பி சமித்து மூட்டையை எடுத்து வரச் சொன்னார்.

யாகம் முடிந்து திரும்பும் போது சீடனிடம்,

"அசடே! இப்படியா செய்வது? உன்னால் எத்தனை காலதாமதமாயிற்று? எனக்கும் பொறுப்பில்லாதவன் என்ற கெட்ட பெயர்! இனிமேல் இந்த மாதிரி யாக சாமான்களோ, என்னுடைய சாமான்களோ விழுந்தால் வண்டியை நிறுத்தச் சொல்லி எடுத்து வர வேண்டும்" என்றார் குரு.

'சரி, சரி' என்று தலையாட்டிக் கொண்டே வந்தான் ஏமாளன்.

கொஞ்ச நேரத்தில் குரு தூங்கி விட்டார்.

"வண்டியை நிறுத்துங்கள்" என்று கூச்சலிட்டான் ஏமாளன்.

வண்டியோட்டி வண்டியை நிறுத்தினான். குரு, "ஏன் வண்டியை நிறுத்தச் சொன்னாய்?" என்று கேட்ட

சாமானா?

படி கண் விழித்தார். ஏமாளன் இறங்கி ஓடினான்.

மாடு போட்டுக் கொண்டே வந்த சாணியை துண்டில் சேகரித்துக் கொண்டு வந்தான் ஏமாளன்.

"இது எதற்கு?" என்று குரு கேட்க, வண்டியோட்டி கேலியாகச் சிரித்தான்.

"நீங்கதானே எது விழுந்தாலும் வண்டியை நிறுத்தச் சொல்லி எடுத்துக் கொண்டு வரணும் என்றீர்கள்! நம்ம மாடு போட்ட சாணி! வீட்டிற்குக் கொண்டு போனால் அம்மா வறட்டி தட்டுவாங்க இல்லையா?" என்று பதிலளித்தான் ஏமாளன்.

பண்டிதர் பொறுமையோடு, "சாணியை எடுக்க இனிமேல் வண்டியை நிறுத்தாதே! உருப்படியான சாமான்களை எடுக்கத்தான் வண்டியை நிறுத்த வேண்டும்" என்றார்.


"ஆகட்டும்" என்றான் ஏமாளன்.

சூரியன் அஸ்தமனமாகி இருட்டிக் கொண்டு வந்தது. மழை பெய்த சரம். இருட்டில் உளையில் மாட்டிக் கொண்ட வண்டி குடைசாய்ந்தது. வண்டிக்காரன் மூச்சுப் பேச்சின்றி கிடந்தான். அதிகம் காயம் படாத ஏமாளன் பண்டிதரின் மூக்குக் கண்ணாடி, கம்பு, தானமாகக் கிடைத்த பணம், வேஷ்டி, மூட்டை, குடை என்று ஒவ்வொன்றாய் பொறுக்கிக் கொண்டிருந்தான்.

குரு பரிதாபமாக, "ஏமாளா! வலிதாங்க முடியவில்லை! முதலில் இந்தப் பள்ளத்திலிருந்து என்னைத் தூக்கி விடாமல் சாமான்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாயே! சாமான்களா இப்போது முக்கியம்?" என்று கத்தினார்.

"குருநாதா! சமயத்துக்கு ஏற்றாற்போல பேசுவது ரொம்பத் தப்பு! சாமான்கள்தான் முக்கியம் என்று சற்று முன் வரை போதித்தவர் நாக்குப் புரண்டு பேசலாமா? நீங்கள் உருப்படியான சாமானா? வண்டிக்காரன், மாடு எல்லாம் உங்களுக்குத் துணையாக இருக்கின்றன. நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று நடையைக் கட்டினான் ஏமாளன்.

குருவுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை!



தலையில் சூடாத பூ; வாசம் இல்லாத பூ அது என்ன பூ?

1. அடுக்கடுக்கு சேலை கட்டிய அழகுசிங்காரி அழாதவர்களைக் கூட அழ வைப்பாள் – அவள் யார்?

2. அழைக்கும் போது உரக்கக் குரல்கொடுப்பான். பேசும் போது காதில் கிசுகிசுப்பான். – அவன் யார்?

3. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியவில்லை. – அது என்ன?

4. ஒருவன் ஒட்டினான் ஒருவன் பிரித்தான் – அது என்ன?

5. வளர்வதும் மெலிவதும் இவளது வாடிக்கை – அவள் யார்?

– டி. சந்தானம், பெரம்பலூர்.

விடை :
1. வெங்காயம்,
2. டெலிபோன்,
3. தேங்காய்,
4. தபால்,
5. நிலா.

1. முதுகில் அடிவாங்கி ஊருக்குச் செல்வான். – அவன் யார்?

2. தலையில் சூடாத பூ வாசம் இல்லாத பூ – என்ன பூ?

3. வெள்ளைப் பையன் தலையில் சிவப்புத் தொப்பி – அவன் யார்?

4. யாரும் கேட்காமல

1. நீ சிரித்தால் அது சிரிக்கும்;
நீ அழுதால் அது அழும் – அது என்ன?

2. ஒரு கண் உடையேன்;
ஓடி ஓடி அடைப்பேன் – நான் யார்?

3. குடுகுடுவென வருவேன்
கிடுகிடுக்க வைப்பேன் – நான் யார்?

4. எங்கள் வீட்டுத் தோட்டம் மிகப் பெரியது. அதை என்னால் பார்க்க முடியாது. உன்னால்

விடை :
1. பச்சைக் குத்தல்,
2. சோளக்கதிர்,
3. பூட்டு, சாவி,
4. கொட்டை முத்து.

1. காசு கொடுத்து வாங்கியது. ஒசி கொடுக்க முடியாதது – அது என்ன?

2. இவன் இடுப்பைச் சுற்றி இருநூறு பிள்ளைகள் – அது என்ன?

3. மாமியார் பெட்டகத்தில் மருமகள் கைவிடுகிறாள் – அது என்ன?

4. முள் முள்ளாயிருக்கும் பாகற்காயுமல்ல, உடைத்தால் வெள்ளையாக இருக்கும். தேங்காயுமல்ல. உருக்கினால் வெண்ணெய்யாயிருக்கும். நெய்யுமல்ல – அது என்ன?

– ச. அரு. சுரேஷ், கே. ஆத்தங்குடி.

பாடுவார்; காசு வாங்காமல் ஊசி போடுவார் – யார் அவர்?

5. மழையில் பிறந்தவனுக்கு வெயிலென்றால் பகை – யார் அவன்?

6. இவர்கள் சேர்ந்தால் உலகம் தெரியாது. பிரிந்திருந்தால் உலகம் தெரியும். – யார் இவர்கள்?

– சா. அனந்தகுமார்,
குமரி மாவட்டம்.

விடை :
1. தபால்,
2. வாழைப்பூ,
3. தீக்குச்சி,
4. கொசு,
5. காளான்,
6. கண் இமைகள்.



பார்க்க முடியும் – அது என்ன?

5. மரத்தில் காய்க்காத பூ; கறிக்கு உதவும் பூ – அது என்ன பூ?

– ச. கார்த்திகா,
எட்டாம் வகுப்பு,
ஆக்ஸிலியம்
மேல்நிலைப்பள்ளி,
தஞ்சாவூர்.

விடை :
1. கண்ணாடி,
2. ஊசி,
3. தந்தி,
4. முதுகு,
5. அப்பளப்பூ.

விடுகதைப் பக்கம்

1. கையகலக்காரனுக்கு பேச வாயில்லை; பார்க்கக் கண்ணில்லை – ஆனால் குதித்து குதித்து ஆடுவதில் மட்டும் கெட்டிக்காரன்! – அவன் யார்?

2. பதுங்கிப் பதுங்கிப் பாயும், புலியல்ல! இலக்கை நோக்கிப் பாயும், ராக்கெட் அல்ல! – அது என்ன?


3. விலை கொடுக்காமல் வாங்கிய விரிப்பில் கோடி துவாரங்கள்! – அவை என்ன?

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
லால்பேட்டை.

விடை :
1. இதயம்,
2. துப்பாக்கிக் குண்டு,
3. நட்சத் திரங்கள்.







எல்லா யானைகளுமே கிட்டப் பார்வை உடையவை. தொலைதூரத்தில் இருப்பது எதுவுமே தெரியாது. தினம் யானைக்கு 272 கிலோ தீனி வேண்டும். 250 லிட்டர் தண்ணீர் குடிக்கும். 32 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும்.

ஆதாரம் : **அறிவோம் அறிவியல் துணுக்குகள்**

– எ.எல். சாதிக், காரைக்கால்.

நமது காலண்டர் முறை தோன்றியது ரோமானிய நாட்டில் தான். அவர்கள் 'உலூ மெக்ஸ்' என்ற கடவுளுக்குக் கொண்டாடப்படும் 'பெப்ருவர்' என்ற விழாவின் நினைவாகத்தான் வருடத்தின் இரண்டாவது மாதத்திற்கு பிப்ரவரி என பெயர் ஏற்பட்டது.

ஆதாரம் : **தெரிந்த செய்திகள் தெரியாத உண்மைகள்**

– ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.

வட அயர்லாந்தில் ஒரு பிடி வைக்கோலை வீட்டு வாசலில் செருகி வைத்திருந்தால் அந்த வீட்டில் நாய் உள்ளது, ஜாக்கிரதை என்று அர்த்தம்.

ஆதாரம் : **தெரிந்த செய்திகள் தெரியாத உண்மைகள்**

– நாகூர். ஆர். லோகநாதன்.

ஏழு அடி உயரமும் எண்பது கிலோ எடையும் கொண்டது கங்காரு. ஒரு பெண் கங்காரு போடும் குட்டி, ஒரு எலி போடும் குட்டிகளை விட மிகச் சிறியது. பிறந்த கங்காரு குட்டியின் உயரம் நம் கட்டை விரல் அளவிருக்கும்.


கடலுக்கடியில்


ஆதாரம் : **அதிசயம் 1000**

– தேனி முருகேசன், தேனி.

எகிப்து நாட்டு பருந்துகள் தீக்கோழி முட்டையை உடைக்க கற்களைப் பயன் படுத்துகின்றன. கல்லைக் கால்களில்









பற்றிக் கொண்டு மேலேயிருந்து முட்டை மீது விழும்படி போடுகின்றன.

ஆதாரம் : **அதிசய உண்மைகள்**
– பி. ராஜசேகரன், மதுரை.

- ஆண் பட்டுப் பூச்சி, தனது துணையை ஆறு மைல்களுக்கு அப்பாலிருந்தே கண்டுகொள்ளும்.
- ஒரு அன்னப் பறவைக்கு சுமார் 25,000 சிறகுகள் இருக்கும்.

மலைகள்!

- பிறர் அறியாவண்ணம் ஒரு அறைக்குள் இருந்து ஏதேனும் ஒரு செயலில் ஈடுபடுவதற்கு In Camera என்று பெயர்.
- ஒரு நண்டு தன் ஆயுட்காலத்தில் (பாம்பைப் போல) 18 முறை சட்டை உரிக்கிறது.

– ஔவை. ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்.

பூமியின் மேற்பரப்பில் மலைகள் இருப்பது போன்று கடலில் நீருக்கு அடியில் மலைகள் உள்ளன.


உலகம் முழுவதும் பரவியுள்ள கடலில் மலைகள் இருப்பினும் குறிப்பாகப் பசிபிக் பெருங்கடலில் மட்டும் ஒரு மலைத் தொடரே உள்ளது. அது ஹவாய் மலைத் தொடர் என்று கூறப்படுகிறது.


ஹவாய் மலைத் தொடரின் நீளம் 650 முதல் 800 மைல்களாகும்.


இந்த மலைத் தொடர், நீரின் அடித் தளத்தில் இருந்து 10,000 அடிகளுக்கு மேல் உயர்ந்துள்ளது. நீர் மட்டத்திற்குக் கீழே ஏறக்குறைய ஐயாயிரம் அடி ஆழத்தில் இந்த மலையின் சிகரம் அமைந்துள்ளது. கடலுக்கடியில் உள்ள மலைகளிலேயே இதுவே பெரிய மலைத் தொடராகும்.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

பிருந்தாவனம்







ஜப்பான் நாட்டு மக்கள் தங்கள் நாட்டை நிப்பான் என்றும் அழைக்கிறார்கள். காரணம், ஜப்பானின் முக்கிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி இரண்டும் குண்டுவீச்சால் உருக் குலைந்து போனாலும் படிப்படியாக வளர்ச்சி பெற்று உலகை வியக்க வைத்தது அந்நாடு. இந்த வளர்ச்சியை வைத்தே நிப்பான் என்றழைக்கின்றனர். 'நிப்பான்' என்பதன் பொருள், 'உதயசூரியன்' என்பதாகும்.

– ப. ராமகிருஷ்ணன்,
புதுக்கோட்டை.

சூரியக் குடும்பக் கிரகங்களின் துணைக்கோள்களில் மிகப் பெரியது எது தெரியுமா? வியாழனின் 'கனிமேட்'. இதன் சராசரி விட்டம் 5260 கி.மீ. மிகச் சிறிய துணைக்கோள் : அதே வியாழன் கிரகத்தின் 'யூரோப்பா'தான். இதன் விட்டம் – 3140 கி.மீ. ஏழு துணைக் கோள்களில் நம் புவியின் சந்திரன் 6-வது இடம் வகிக்கிறது.


– எம். எஸ். உம்மு அம்மாரா,
இமாம்கஸ்ஸாலி மெட்ரிக்பள்ளி.
லால்பேட்டை.

கோக்கோவின் சுவையை விரும்பாத குழந்தைகளே இல்லையென்று கூறலாம். கோக்கோ, மரம் போல் வளரக்கூடியது. பூக்கள் கிளைகளிலும் மரத்தின் அடிப்பாகத்திலும் காணப்படுகின்றன. மலர்களின் உட்பகுதியில் விதைக் கூடுகளைக் காணலாம். விதைகளைக் குவித்து வாழை இலைகளால் மூடி 7 நாட்கள் புளிக்க வைக்கிறார்கள். நன்கு உலர்ந்த பின்னரே சந்தைக்கு அனுப்பப்படுகின்றன. இது பொடியாக்கப்பட்டு சாக்லேட், மிட்டாய் மற்றும் குடிக்கும் பான வகைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. உலகிலேயே கோக்கோவை அதிக அளவில் கானாவும் நைஜீரியாவும் விளைவிக்கின்றன.

ஆதாரம் : விஞ்ஞானத்தோடு
இணைந்த வாழ்க்கை
– நெ. இராமன்.

பொதுவாகக் காகங்களால் உயரமாகப் பறக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட உயரம் வரைதான் பறக்கும். ஆனால் காகங்களில் சிகப்பு நிறக் கால்களைக் கொண்ட காகங்கள் மட்டும் உயரமாகப் பறக்கின்றன. இக்காகங்கள் கடல் மட்டத்திலிருந்து 8200 மீட்டர் உயரம் வரை பறக்கின்றன.

– ஆர்.ஆர். பூபதி,
திண்டுக்கல்.



சைபீரியாவில் கிடைக்கும் இயற்கை வாயுவை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்குவதற்காக முன்பு சோவியத் யூனியன் 4570கி.மீ. தூரம் குழாய்களை அமைத்தது. உலகிலேயே நீளமான குழாய் அமைப்பு இதுதான்.

– ஆர். பிரகாசம்,
மருதாடு.

307 மொழிகள்!

லண்டனில் 307 மொழிகள் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். உலகிலேயே பல்தரப் பட்ட மக்கள் ஒன்றிணைந்து வாழும் கலா சார நகரமாக லண்டன் திகழ்கிறது என ஆய்வை நடத்திய வெஸ்ட் மினிஸ்டர் பல்கலைக் கழகம் கூறியுள்ளது. லண்டனுக்கு அடுத்தபடியாக நியூயார்க் நகரம் இச் சிறப்பைப் பெறுகிறது.

சிவப்பு நிலா!

இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் ஜனவரி 21-ந் தேதியன்று ஏற்பட்டது. வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பாவில் நன்றா கவும் ஆசியாவில் சில பகுதிகளிலும் தெரிந்த சந்திர கிரகணத்தின் போது நிலா சிவப்பு நிறமாகக் காட்சியளித்தது. சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் வரும் போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது. கிரகணத்தின் போது பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் நிலா சிவப்பு நிறமாகக் காட்சியளிக் கிறது.

வீர விருது

1999-ஆம் ஆண்டிற் கான மத்திய அரசின் வீரச் செயல்களுக்கான விருது 15 சிறுவர், சிறுமியர்களுக்கு வழங் கப்பட்டுள்ளது. இதில் வேலூ ரைச் சேர்ந்த எஸ். கருணா, எஸ். கவிதாவுக்கும் விருது கிடைத்துள்ளது. இவர்கள் வசிக்கும் கிராமத்தில் திடீ ரென காட்டு வெள்ளம் ஏற்பட்ட போது அதில் சிக் கிக் கொண்ட இரண்டு சிறுவர் களைத் துணிந்து காப்பாற்றியுள்ளனர். அதே போல் புதுவையைச் சேர்ந்த 14 வயது ஆர். குப்புராமன் ஆற்றில் மூழ்க இருந்த 3 சிறுமிகளை மீட்டிருக்கிறான். விருது பெற்றவர்களில் குப்புராமனும் ஒருவன்.

சிறிய புத்தகம்!

மிகச் சிறிய திருக்குறள் புத்தகம் ஒன்று கோவை மாவட்டம் காரமடையைச் சேர்ந்த சக்திவேல், பாபு சார்லஸ் என்பவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தின் நீளம் 2 செ.மீ., அகலம் 1.5 செ.மீ. இதில் 1330 குறள்கள் உள்ளன. 133 அத்தியாயங் களுக்கு 133 படங்களையும் வரைந்துள்ளனர். லென்சின் உதவியால் பென்சிலில் எழுதப் பட்டுள்ளது புத்தகம். ஒரு பக்கத்திற்கு 4 முதல் 5 குறள்கள் இடம்பெற்றுள்ளன. சக்தி வேல், பாபு, சார்லஸ் இருவரும் கடந்த ஜூலை மாதம் 2.5 கி.மீ. நீளமுள்ள வாழ்த்துக் கடிதம் ஒன்றை எழுதி கார்கில் வீரர்களுக்கு அனுப்பி எல்லோரையும் அசத்தினார்கள்!

செயற்கைக் கண்!

உலகின் முதல் செயற்கைக் கண்ணை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். பார்வையிழந்த ஒருவருக்குக் கண்ணைப் போல் பயன்படு கிறது ஒரு சின்னஞ்சிறிய காமிரா. நியூயார்க்கைச் சேர்ந்த ஜெர்ரி என்பவ ருக்கு 36 வயதில் பார்வை பறிபோனது. இவரது கண் பகுதியில் காமிரா பொருத் தப்பட்டு, வயர் மூலம் நேரடி யாக மூளையுடன் அது இணைக்கப்பட்டது. இதன் துணை கொண்டு ஜெர்ரியால் பொருள்களை உணர்ந்தறிய முடி கிறது. பொருட்களை அப்படியே பார்க்க முடியாவிட்டாலும் பொருள் இருப்பதை இவரால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்தச் செயற்கைக் கண் சாத னத்தை உருவாக்கியவர் டோபிளி. இவர் மருத்துவ சாதனங்களைத் தயாரிக்கும் நிறு வனத்தின் தலைவர். டோபிளியின் காமிரா கண் விஞ்ஞானிகளின் உழைப்பால் இன்று பார்க்கும் திறனை எட்டியுள்ளது.





● இ. சிவநேசன், மதுரை – 2.

? 'லேபரோஸ்கோபிக் சர்ஜரி' என்றால் என்ன? இது எப்போது, யாரால் கண்டு பிடிக்கப்பட்டது? எதற்காக இந்த சர்ஜரி செய்யப்படுகிறது?

! 1987 – ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டில், டாக்டர் பி. மௌரம் என்பவர் முதன்முதலில் லேபரோஸ்கோபிக் அறுவை சிகிச்சையைக் (Laparoscopic Surgery) கண்டுபிடித்து நடைமுறைப் படுத்தினார். மருத்துவ உலகில் பிரபலமாகி வருகின்ற இந்த அறுவை சிகிச்சைக்குச் சிறப்பான அனுபவம் தேவை. இந்தச் சிகிச்சையை எப்படி செய்கிறார்கள் என்பதை இப்போது பார்ப்போமா? முதலில் நோயாளியின் வயிற்றுக்குள் கரியமில வாயுவை செலுத்தி வயிறை உப்பச் செய்கிறார்கள். பின்பு தொப்புளில் ஒரு சிறு துளையிட்டு டெலஸ்கோப் என்ற கருவியை உள்ளே செலுத்துகிறார்கள். இதனுடன் வீடியோ கேமிரா இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கேமிராவை அறுவை சிகிச்சை அரங்கில் இருக்கிற தொலைக்காட்சிப் பெட்டியோடு இணைத்துக் கொள்வார்கள். இப்போது வயிற்றின் உட்புறம் உள்ள உறுப்புகள் தொலைக்காட்சித் திரையில் தெளிவாகவும் பெரிய அளவிலும் தெரியும். பின்பு சில நுட்பமான கருவிகளை டெலஸ்கோப்பில் செலுத்தி, அறுவை சிகிச்சையைத் தொடங்குவார்கள். எந்த உறுப்பைப் பிடிப்பது, எதை ஒதுக்குவது, எப்பகுதியை வெட்டுவது போன்ற விவரங்களைத் தொலைகாட்சி திரையில் பார்த்துக் கொண்டே சிகிச்சையைத் தொடருவார்கள். சிகிச்சை முடிந்ததும் முதலில் போட்ட சிறு துளையைத் தைத்து மூடி விடுவார்கள். நோயின் தன்மையைப் பொருத்து சிலருக்குத் தொப்புளில் அல்லாது வயிற்றில் வேறு சில இடங்களில் துளையிட்டு அறுவை சிகிச்சைச் செய்ய நேரலாம். இந்த நவீன சிகிச்சையால் நோயாளிக்கு என்ன பலன்? அறுவை சிகிச்சைக்காக வயிற்றைக் கிழிக்க வேண்டியதில்லை; இதனால் பெரிய அளவில் தழும்பு விழுவதில்லை. அடுத்து, சிகிச்சை முடிந்த மூன்று நாட்களில் நோயாளி தன்னுடைய வழக்கமான பணிகளுக்குத் திரும்பி விடலாம். குடல் வால் நீக்கம், பித்தப் பை நீக்கம், பித்தப் பைக் கற்கள் நீக்கம், கருப்பைப் புண் மற்றும் இரைப்பைப் புண் அறுவைச் சிகிச்சைகள் தற்போது இந்த முறையில்தான் செய்யப்படுகின்றன.




ஞாபக சக்திக்கு மாத்திரைகளைச் சாப்பிடலாமா?

● எஸ். குமரேசன், குத்தாலம் – 1.

? டாக்டர், என் தோல் அடிக்கடி வறண்டு போய் விடுகிறது. இது ஏன் டாக்டர்? இதற்கு என்ன செய்யலாம்?

! தோலுக்கு அடியில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகள் நீர்ச்சத்தை இழக்கும்போது தோலில் வறட்சி ஏற்படும். பொதுவாக அடிக்கடி சோப்புப் போட்டுக் குளிப்பவர் களுக்கு, தோலின் மேற்பரப்பில் இருக் கின்ற எண்ணெய்ப் பசை நீங்கி விடும். இது தோல் வறட்சிக்கு வழி விடும். சில ருக்குக் குளிர்ச்சியான தட்பவெப்பம் ஒத்துக் கொள்வதில்லை. குளிர்ச்சியால் தோல் சுருங்கும்பொழுது எண்ணெய்ச் சுரப்பிகளும் சுருங்கி விடும். இதனால் தோல் வறட்சி ஏற்படலாம். இவை தவிர பரம்பரை அம்சம், இயக்கு நீர்க் குறை பாடு, சில மருந்துகளின் பக்க விளைவு போன்ற காரணங்களால் கூட இந்தக் குறைபாடு வருவதுண்டு. காரணமறிந்து சிகிச்சை பெற்றால் குணம் கிடைக்கும். மருத்துவரின் நேரடி ஆலோசனையின் பேரில் 'நைப்பேற்ற மருந்து' (Moisturising cream) ஒன்றை தோலில் தினமும்



தடவி வந்தால் வறட்சி நீங்கும். இந்த மருந்தைத் தோலில் தடவு வதற்கு முன்பு, முதலில் தண்ணீரால் தோலை ஈரப்பதப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஈரப்பதம் வெகு நேரத்திற்கு நிலைக்கும். வறட்சி விரைவில் குணமாகும். இந்த நோயால் துன்பப்படுபவர்கள் கண்டிப்பாகச் சோப்பு போட்டுக் குளிக்கக் கூடாது.

● எமினால் குப்புசாமி, நெய்வேலி – 1.

? டாக்டர், அதிக உடற்பயிற்சி செய்வதினால் வளர வேண்டிய உயரம் தடைபடும் என்று கூறுகிறார்களே, இது எந்த அளவுக்கு உண்மை?

! இதில் எள்ளளவும் உண்மையில்லை, குப்புசாமி! ஒருவருடைய உயரத்தை நிர்ணயிப்பது அவருடைய உடலில் இருக்கின்ற மரபணுக்களே! உடற்பயிற்சி களால் உடலின் உயரம் தடைபடும் என்று கூறுவதற்கு அறிவியல் ஆதாரம் எதுவு மில்லை.

● ஆர். பால்வேந்தன், நாமக்கல்.

? ஞாபக சக்திக்காக சில மாணவர்கள் மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்களே? அது நல்லதா, கெட்டதா, டாக்டர்?

! நான் படித்து என் நோயாளிகளுக்குப் பயன்படுத்தி வருகின்ற அலோபதியில் ஞாபக சக்திக்காக எந்த மாத்திரையும் இல்லை. வல்லாரை கலந்த மாத்திரைகள் ஞாபக சக்தியைப் பெருக்கும் என்று கூறி வருகிறார்கள். மருந்துக் கடைகளிலும் இந்த மாத்திரைகள் கிடைக்கின்றன. இதைச் சாப்பிடுவதால் ஞாபக சக்தி பெருகுகிறதோ இல்லையோ 'மாத்திரை வியாபாரம்' பெருகுகிறது. என்னுடைய அனுபவத்தில் இந்த மாத்திரைகளைச் சாப்பிடும் மாணவர்களுக்கு மனதளவில் ஒரு நம்பிக்கை கிட்டுகிறது. 'ஞாபக சக்தி மாத்திரை சாப்பிட்டிருக்கிறோம்; நாம் படித்தவை எல்லாம் மனதில் நிற்கும்' என்ற நம்பிக்கையின் அடிப் படையில் அவர்கள் படிப்பதால் பாடங்கள் ஓரளவு நினைவில் நிற் கின்றன. மற்றபடி மாத்திரையில் உள்ள மருந்து மூலமாக ஞாபக சக்தி பெரு குவது சந்தேகம்தான்!



புத்திசாலி ராமா!

கதை: ஷாந்தி
படம்: சுமன்




அம்மாகிட்டே புத்திசாலின்னு பேர் வாங்கணும். கூட ஐந்து ரூபாய் போட்டுத் தாங்க.
ம்... அதுதான் சரி.
புத்திசாலின்னு பேர் வாங்கணுமா? அப்ப ஒண்ணு செய்... ஒரு வருஷம் கழிச்சு வந்து பணத்தை வாங்கிட்டுப் போ.
சரிங்க ஐயா, வரேன்.
அம்மா... என் திறமையைக் காட்டி ஆட்டை நூற்றி இருபது ரூபாய்க்கு விற்று விட்டேன்.
புத்திசாலி! பணம் எங்கே?
ஆனால் பணம் ஒரு வருஷம் கழிச்சுதான் கிடைக்கும்.
அடப்பாவி! மருந்துச் செலவுக்கு விற்கச் சொன்னால் இப்படி பண்ணிட்டியே?
நம்ம பக்கத்து வீட்டு மாசாணம் மாதம் பத்து ரூபாய் சஞ்சைகாவிலே கட்டி ஒரு வருஷம் கழிச்சு நூற்றி இருபது ரூபாய் வாங்கறான்.
அதனாலே?
நாம பணம் கட்டாமலே 120 ரூபாய் கிடைக்குதே!
ஐயோ அவனும் ஏமாத்தறான். நீயும் ஏமாந்தவன். உங்களை நம்பி ஆட்டைக் கொடுத்தேனே...
என்ன பண்ணாலும் குற்றம் சொல்றதே உன் வேலையாய்ப் போச்சு!
!

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு

திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்கவிருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவாகவும் நீங்கள் செயல்பட வேண்டும்.

இந்த மாதப் போட்டி : இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் யார்?

1. கவாஸ்கர், 2. கபில்தேவ்.

சரியான விடையைத் தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். இந்த மாதத்துடன் மேற்கண்ட நான்கு மாவட்ட வாசகர்களுக்கான போட்டி முடிவடைகிறது. அடுத்த மாதம் எந்த மாவட்டங்கள்? காத்திருங்கள். பரிசை வெல்லுங்கள்.



கோகுலம் க்விஸ்

1. சமீபத்தில் அடைக்கலம் தேடி இந்தியாவிற்கு வந்த சீன பௌத்தத் துறவி ________

2. நம் இதயத்தில் ________ அறைகள் உள்ளன.

3. இடி தாங்கியைக் கண்டுபிடித்தவர் ________

4. நமது உடலின் சராசரி வெப்பநிலை ________

5. நம்மைக் கடிப்பது ________ கொசுக்கள்.

6. உயிர்ச்சத்து அல்லது உயிர்ப் பொருள் என்றழைக்கப்படுவது ________

7. பிராணி இனங்களில் ஆறில் ஐந்து பாகம் ________ இனங்கள்.

8. வைட்டமின் பி குறைவால் ஏற்படும் நோய் ________


9. ஒரு தினப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்தவர் ________

10. அஸ்ஸாம் தலைநகரம் ________

மேலே குறிப்பிட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் விடைகளைக் கண்டு பிடித்து எழுதி அனுப்புங்கள். மறக்காமல் முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.
முடிவு தேதி 31.3.2000

ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97





படிக்கும் போதே கண்ணீர் வந்தது!

படக்கதைகள்...

✉ மோதிரம், பொழுதுபோகாத ராஜா, வெள்ளைக் காகங்கள் என ஒவ்வொரு படக்கதையும் ஒவ்வொரு விதத்தில் ரசிக்கும்படி இருந்தது. படக்கதைகளின் எண்ணிக்கை அதிகமாக ஆக எங்களுக்குச் சந்தோஷம் தான்!

– எம். பல்லவி, ஆர். கீர்த்தனா, எஸ். காவ்யா, எட்டாம் வகுப்பு, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம்.

கண்ணீர்...

✉ கறுப்பு – வெள்ளைப் படங்களிலிருந்து இன்றைய வண்ணப்படங்கள் வரை அற்புதமாக நடித்து நம்மைச் சிரிக்க வைத்தவர் மனோரமா. அவரது குழந்தைப் பருவத்தைப் படிக்கும்போதே கண்ணீர் வந்தது. பல்வேறு கஷ்டங்களுக்குப் பிறகுதான் வெற்றி என்ற சுவையான கனி எல்லோருக்கும் கிடைக்கிறது என்பதை அறிந்து கொண்டேன்.

– பா. உபயதுல்லா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, பரமக்குடி.

வயிறு வலித்தது!

✉ அதிர்ஷ்ட ராஜா என்ற கதையைப் படித்து வயிறு குலுங்கச் சிரித்தோம். சிரித்து, சிரித்து வயிற்றில் வலியே வந்து விட்டது. அற்புதமாக வரைந்துள்ள ஓவியரின் படத்தைப் பார்த்தாலே சிரிப்பு பீறிடுகிறது.

– என். பரணி, என். கற்பகம், குளித்தலை, திருச்சி மாவட்டம்.

டிராக்டரைப் பார்த்தால்...

✉ எங்கள் ஊரில் பெரும்பாலானோர் விவசாயம்தான் செய்கிறார்கள். தினமும் டிராக்டர் கண்ணில் பட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் டிராக்டரைப் பற்றி நான் எதுவும் யோசித்தது கிடையாது. கோகுலத்தில் டிராக்டரைப் பற்றிப் படித்த பின் டிராக்டர் மேல் எனக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

– கே. சந்திரன், பத்தாம் வகுப்பு, திருவையாறு.

கனவா, உண்மையா?

✉ கோலிக்குண்டு கோபிகா கதை சுவாரசியமாக இருந்தது. கோபிகாவைப் போலவே எனக்கும் இது கனவா, உண்மையா என்ற செய்தி மண்டையைக் குடைந்து கொண்டே இருக்கிறது!

– பெ. சிவகாமி, வேலூர்.

இத்தனை வகைகளா?

✉ புறாக்கள் என்ற தலைப்பில் வெளியான ஆழியின் சித்திரமடல் பார்க்கவும் படிக்கவும் நன்றாக இருந்தது. புறாக்களில் இத்தனை வகைகளா என வியந்து போனேன். அவற்றின் சக்தியும் பிரமிப்பூட்டுவதாகவே உள்ளது.

– பி. வனஜா, பெங்களூர்.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	: Chennai
2. Periodicity of Publication	: Monthly
3. Name of Printer	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2000

K. Rajendran
Publisher



400 விக்கெட்டுகளை வீழ்த்திய வாசிம் அக்ரம்!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கேப்டன் வாசிம் அக்ரம். ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மூன்று நாடுகளுக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ஜனவரி 17-ந் தேதி பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே சிட்னியில் ஒரு போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் 400 விக்கெட்டுகளை எட்டி ஒரு தினப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சிறப்பைப் பெற்றார் வாசிம் அக்ரம்.

• வாசிம் அக்ரம்

32 வயதாகும் வாசிம் அக்ரம் 1966 ஆம் ஆண்டு ஜூன் 3ந் தேதி லாகூரில் பிறந்தவர். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் சக ஆட்டக்காரர்களிடம் தோழமை உணர்வோடு பழகுவது இவரின் ப்ளஸ் பாயிண்ட்கள்.

ஒருநாள் போட்டிகளில் முத்திரை பதித்த அக்ரம் டெஸ்ட் போட்டிகளிலும் பிரகாசித்து வருகிறார். இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 434 விக்கெட்டுகளை வீழ்த்தி முதல் இடத்தில் இருக்கும் கபில்தேவ், ரிச்சர்ட் ஹாட்லி, கோர்ட்னி வால்ஷ், இயன்போத்தம் ஆகியோருக்கு அடுத்து ஐந்தாவது இடத்தில் இருக்கிறார் அக்ரம். இதுவரை டெஸ்டில் இவர் எடுத்த விக்கெட்டுகள் 383.


18 வயதில் பாகிஸ்தான் அணிக்காக ஆட ஆரம்பித்த அக்ரமை வழி நடத்தியவர் இம்ரான்கான்.

அக்ரம் உலகின் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் மட்டும் இல்லை. சிறந்த பேட்ஸ்மேனும் கூட. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் 257 ரன்கள் குவித்து ஆட்டம் இழக்காமல் இருந்திருக்கிறார்.

400 விக்கெட்டுகளை வீழ்த்திய பிறகு பேசிய அக்ரம் "அணிக்கு இன்னும் அதிகமான பங்களிப்பைச் செலுத்துவேன். ஒரு தினப் போட்டிகளில் சாதித்தது போல டெஸ்ட் போட்டிகளிலும் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைக்க வேண்டும் என்பதே என் விருப்பம்'' என்றார்.

அக்ரம் சாதிப்பார் என்பதில் ஐயமில்லை. காலமும் இருக்கிறது; திறமையும் இருக்கிறது!

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-




''அந்த மாணவன் ஏன் அடிக்கடி ஆசிரியர் காலில் விழுகிறான்?''

''கீழ்படிந்துள்ள மாணவனாம்!''

– எஸ். மோகன்

வரைந்து பழகுங்கள்!



இங்கு தொடர்பில்லாத ஒருவர் இடம் பெற்றுள்ளார். யார் அவர்?





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

